
ஓம் விநாயக நம.

# சந்திர தீபம்

## சைவநீதி வளர்த்திடும் தமிழ்ப் பத்திரிகை

தருமத்தைக் காத்து தவத்தைப் பெருக்கி சிவத்தைப் பேணத் திருவருள் கொண்டது.

UNIVERSITY OF SRI LANKA - JAFFNA
RECEIVED
1981
PERIODICALS DIVISION
LIBRARY




வெள்ளிக்கிழமை [27-2-81]

ரௌத்திரி வரு. மாசி மாதம் 16-ம் நாள்

இதழ்: 4 சுடர்: 9

பேர் அருள் திருநூல் மலர்



# பூரண அமைதியிலே சிவன் சுடர் ஒளியாகத் தோன்றுகின்றார்

## புத்திசாலிகள் பூவாலும் நீராலும் பூசித்து இதனை அடைந்து கொள்வர் குருமகாராஜீ சாயிபாபா மடாதிபதிகள் முதல் பல சாமிஜீகள் காட்டும் வழி முற்றிலும் உங்களைப் பாழாக்கும். நன்னெறிப்பட விடாது.

எல்லா நாகரிகச் சிறப்புகளும் இழந்து தன் பொருளெல்லாம் பிறர் அனுபவிக்கக் கண்டு இன்புறுகின்ற நீதியுடையார்க்கே சிவன் ஒளிதரிசனம் பெறலாகும். இதைத்தான் எங்கள் நாயன்மார்கள் வலியுறுத்தினார்கள். தன்னிடத்திலுள்ள பொருள் யாவும் பிறர் நலனுக்காகத் தனக்குத் தரப்பட்டது என உணர்ந்த பெரியோர்களே பெரிய புராணத்து நாயன்மார். தூர்த்த வேடம் கொண்டு திருநீறு பூசி வந்த ஒரு பிராமணனுக்குத் தன் மனைவியைக் கொடுத்த இயற்பகையார், பிறமதத்தவனொருவன் பசித்து வந்து அல்லது வறுமையால் நலிந்து வந்து ஏதேனும் இயற்பகையாரிடம் கேட்டிருந்தால், நான் திருநீறுபூசிய சிவனடியார்க்குத்தான் கொடுப்பேன் மற்றையோருக்குக் கொடுக்கமாட்டேன். நில்லாது போய்விடும் என்று திருப்பி அனுப்பியிருப்பாரா? பசித்து வந்து இருந்த ஒருவருக்கு தன் கணவனுக்குரிய மாங்கனியுடன் உடனுணவு கொடுத்த காரைக்காலம்மையார், யாரேனும் ஒரு சமணன் அல்லது புத்தன் பசித்து வந்து கேட்டபோது உனக்குத் தருவது எனக்குப் பாவம் என்று சொல்லிருப்பாரா? ஒரு சிவனடியாருக்குத் தன் பிள்ளையைச் சமைந்துக் கொடுத்த சிறுத்தொண்டர் வேறுருக்கும் உணவு இல்லை என்று சொல்லியிருப்பாரா?

இந்த ஒரு நிலையிலே சைவமக்களாகிய உங்களுக்கு மிகத்தெளிவுபடக் கூறுவது யாதெனில். எமது நாயன்மார்கள் அனைவரும்எல்லாமக்களையும் சிவனடியாராகக் கருதினாரேயன்றி, இவ்வுலகில் வாழ்கின்ற ஏனையர்போல ஈதலிற் சாதி சமயம் பார்த்திருக்கவில்லை என்பதை இங்கு வலிஉறுத்துகின்றோம்.

அடுத்து இந்த இடத்திலே ''பசித்து வந்து ஏற்குமவர்க்கு'' என்று அருணகிரியார் சொல்லும போது சாதி சமயம் சார்ந்த இலக்கணங்களை வகுக்கவில்லை. நல்லவர் தீயவர் என்ற பேதத்தையும் கூடச் சொல்லவில்லை.

திருவீழிமிழலையில் இருந்து பஞ்சகாலத்தில் சோறிட்ட அப்பர் சம்பந்தர், பறைசாற்றி இரண்டு நேரம் சோறிட்டார்கள் என்று சொல்லப்படுகின்றது. அப்படிச் சொல்லும்போது திருநீறுபூசியோர்க்குமட்டும் தான் சோறு மற்றையோருக்கு இல்லை என்று கூறுது ''உலகறியச் சோறிட்டார்'' என்றே கூறப்படுகின்றது! பஞ்சத்தில் வாடும் மக்களின் குணநலம், குலநலம் பார்த்திருப்பாரா? அல்லது காசு கொடுத்த திருவீழிமிழலைப் பெருமான் இன்னாருக்கு மட்டும்தான் உணவு கொடுங்கள் அல்லாதிருந்தால் உங்களுக்கு காசுதரோம் என்று கூறியிருநதாரா? அப்படிக் கூறியிருந்தால் அளவிறந்த கருணையே அப்பொருள் என மறைகள் கூறும் நிலைக்குப் பொருந்துமா?

இன்று இந்த நிலையைக் குறிப்பிட வந்ததேனென்றால் எல்லாப் பழி பாவங்களையும் புரிந்து பணத்தை வங்கியில் போட்டுவிட்டு அயலவர் பசியால் வாட மாடங்கள் மேல் மாடங்கள் கட்டி காரின் மேல் கார்கள் வைத்து எல்லா நாகரீக சுகங்களையும் அனுபவித்துக் கொண்டு சில சுவாமிஜீகளிடம் தாங்கள் ஒளி காணலாம் என்ற ஒரு பேதமைத்தனமான கொள்கையைக் நம்மக்களில் பலர் கொண்டுள்ளார்கள். கீழே தரப்படும் தேவாரத்தை நன்கு நீங்கள் உணர்வீர்களானல் சிவன் ஒளி இன்னுமொருவர் காட்டக் காணமுடியாது என்பதறியலாம்! அது அவர் அவர் தன்தனது தவநெறியால் தனக்குள் திருவருள்ளால் தோன்றப்படுவது.

ஒரு உண்மையைய எம் தமிழ் மக்களுக்கு எடுத்து சொல்கின்றேன். எங்கள் சைவநெறியில் சிவன்தொண்டு செய்வார் யாவரும் அடியவராகக் கருதப்படுவாரே அன்றி எவரும் சுவாமி இல்லை. திருஞானசம்பந்தர் முதல் யாவரும் அடியவரேயாகின்றனர். சுவாமி என்பது கடவுள் ஒன்று தான். அது அல்லாமல் மற்றைய தேவர்கள் கூட அடியவரே! ஆதலினால் அடியார்களாய தூயபெருமக்கள் அனைவரும் தூய சிந்தையுடன் கொண்ட நற்பணிகளால் சிவனை அடைந்து கொண்டனர்.

ஆனல் இன்று பலர் ஏதோ துறவி என்ற சொல்லை வைத்துக் கொண்டு தமக்கு ஏற்பட்ட சில காயசித்திகளால் திருநீறு கொட்டப்பண்ணல் தாலிக்கொடி கொடுத்தல் ஒளிகாட்டல் பிரசங்கம் செய்தல் முதலியவற்றால் மக்களை ஏமாற்றி மயக்கி முடிவில் அவரை பழுதான வழிக்கு இழுத்து விடுகிறார்கள்.

நோயுடையவர்; வாழ்வில் வேறு வேறு பிரச்சனை உடையவர்கள் இவர்களிடம் போய்ச் சிக்கி பெரும் அவஸ்தைக்குள்ளாகி விட்டனர். நாம் அறிய சகிபாபா சாமியின் திருநீறு கொட்டும் அதிசயத்தினை தனது அருச்சனைத் தட்டத்திலே பெற்றுக் கொண்ட பெண் இப்பொழுது இளம் பருவத்தே விதவையானது. ஆதலினாலே இந்தச் சாமிகளால் என்ன பயன்?

திருஞானசம்பந்தர் திருமருகலில் கணவன் பாம்பு தீண்டி இறந்திட வேறுவகை ஒன்றும் அறியாது கோவில் வாசலில் வீழ்ந்து புரண்டு அழுதிட்ட ஒரு இளம் பெண்ணின் பரிதாப நிலைகண்டு சிவனிடம் தம் பாடல் மூலம் விண்ணப்பித்து எம்பிரானே ஏன் இந்தப் பெண்ணை இப்படித் துயராக்கினாய் எனக் கேட்டு அப்பெண்ணின் கணவனை உயிரெழுப்பி விடுகிறார்.

சுந்தரர் தமக்கு நெடுங்காலம் ஏவல் பணி செய்த ஒரு கூனனையும் குருடனையும் கூனும் குருடும் நீக்கி ஏவல் கொண்டார் எனப் பெரிய புராணம் காட்டுகிறது.

இவர்கள் யாவருமே தம்மைக்கும் பிடுங்கோ தாம் சாமி என்று தம்மை மிகைபடுத்திக் கூறிடவில்லை.

இதனை மாணிக்கவாசகரும் ''அத்தேவர் தேவர் அவர் தேவர் என்று சொல்லி பொய்த்தேவு பேசிப் புலம்புகின்ற பூதலம்'' என்று இந்திய போலிச்சாமி''ஜீ''களை உலகம் மதிப்பது தவறாகும் என்பதை தெளிவுபடக் கூறிவிட்டார்.

அவர்கள் எல்லாரும் ஒரேமுகமாக சிவன் ஒருவனே தெய்வம்; அவனது அருள் இல்லாமல் எதுவும் நலமாகாது என்பதை தெளிவாகச் சொல்லி அவனது வழியானதே சைவம் என்றார்கள். சிவனையே சைவன் என்றார். சுந்தரர் தன்னை ஒரு சைவன் என்றே சொல்கிறார்; சாமி என்று சொல்லவில்லை.

இந்தப்பேதமையான பொய்த்தேவ வழிபாட்டால் மடாதிபகள் சுவாமி! ஐயோ அந்தப் பழி உருவத்திற்கு அந்தணர் அபிஷேகம் பூசை! குருமகாரா''ஜீ'' பாலயோகீ சகிபாபா இவர்கள் சுவாமி! இவர்களுக்கு வீட்டிற்கு வீடு பஜனை பூசை இப்படி பல பிரச்சனை உண்டு. ஒன்றை மட்டும் இங்கு தெளிவுறக்காட்டுகிறேன். எங்காகிலும் சம்பந்தர் உயிருடன் இருக்கும்போது அவருக்கு ஆரேனும் அபிஷேகம் செய்தனரா? அல்லது திருநாவுக்கரசர்க்கு அபிஷேம் மாணிக்கவாசகர்க்கு அபிஷேகம் நடந்துள்ளதா? இல்லையே! அவர்கள் தமக்கு ஏதேதோ மக்களைச் செய்யும்படி விட்டிருப்பாரா?

இன்று அவர்களது உருவச்சிலை கட்டு அபிஷேகம் செய்கிறார்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதே இல்லை என்று சொல்லவில்லை. ஆனுல் அவர்கள் உயிருடன் வாழ்ந்த காலத்தில் ஒருபோதும் இந்தச் செயலை பிறர் தமக்குச் செய்யவிடவில்லை. சுந்தரர்க்கு சேர அரசர் ஏதோ பூசை செய்திட சுந்தரர் அதை ஏற்கமறுத்தார் என்று பெரிய புராணம் சொல்கிறது.

கோட்புலியார் தனது பெண்கள் இரண்டை இவருக்கு அடிமையாகக் கொடுத்திட அப்பிள்ளைகளை ஏற்று தமது மடிமீது தூக்கி வைத்து தம் புதல்வியாகக்கருதி முத்தமிட்டு தன்னை அப்பிள்ளைகளின் தந்தை எனக் கருதி சிங்கடிவனப்பகை அப்பன் என தம்பதிகத்தில் அப்பிள்ளைச் சிறப்பிக்சின்ருர்.

ஆகையினுலே தமிழ் மக்களே நீங்கள் எந்த ஒரு மடாதிபதியையும் போய் சுவாமி என்று வணங்காதீர்கள்! அவரை அழைத்து கோயிலில் மேடை போட்டு பிரசங்கம் உபதேசம் முதலியவற்றைச் செய்வியாதீர். இந்த மடாதிபதிகள் யாரும் மிகவும் பின்னுல்தான் வந்தவர்கள்! இன்றுவரை வாழ்ந்த பல மடாதிபதிகளும் நோய்வாய்ப்பட்டுச் செத்தவர்கள்! அவர்களில் யாரும் கடவுளைக் கண்டவர் அல்ல! அவர்கள் வழி வேறு பிறம்பாய.து காஞ்சி காமகோடியாயினும் அவர் சைவமரபிற்குரியவர் அன்று. சைவநன்நெறியில் மடாதிபதிகள் சுவாமிகள் ''ஜீ''க்கள் இல்லை. அவர்களைப் பின்பற்றி வாழ்ந்தார் யாரும் நல்நெறிப்படவும் இல்லை. அல்லது கடவுள் அருள் பெற்ருரும் இல்லை. இதை உறுதியாக நம்புங்கள்.

உண்மையில் மடங்கள் போய் மடாதிபதிகட்கு தொண்டு செய்தவர் பலரும் வன்செயலில் ஈடுபடுபவராகவும் கொலை முதலிய பழுதான செயல்களில் ஈடுபடுபவராகும் காணப்படுகின்றனர். சரி நான் கேட்கிறேன்! இந்த மடாதிபதிகள் பின் சென்றவரில் யார் ஒருவர் அருள்நிலை பெற்றவர். ஒருவரைக் காட்டட்டும்?

இன்னும் மடங்கள் புத்தம் சமணம் கிறிஸ்தவம் முதலிய சமயங்கள் போன்று இவர்களும் மனிதத்தத்துவத்தில் தங்களைச் கடவுளாக்கி அந்த வழியில் தமக்கு என பத்ததி வைத்திருக்கிருர்கள். இந்த ஒரு பழி நாட்டில் பெருகி 345வது பட்டம் என்ற பழியால் நீடிக்கப்பட்டு ஐயோ இந்த தமிழரது நல்வாழ்வு அத்தனையையும் கெடுத்து மக்களைப் பேதைகளாக்கியதே மடங்கள் செய்த பலன். ஆதலினுலே தமிழ் இனமே நீ உய்தி அடைய விரும்பின் இந்த மடாதிபதிகளையோ அல்லது இன்றிருக்கும் சுவாமி''ஜீ''களையோ நம்ப வேண்டாம். நீ உயர்ந்திடற்கு ஒருவழி நீதியாக நட எவரிடமும் பகைபாராட்டாதே இயன்றவரை தானம் கொடு சிவன் அருள் தானுகவரும்.

திருநாவுக்கரசர் ஒரு தேவாரத்து

''மெய்மையாம் உழவைச் செய்து விருப்பெறும் வித்தை வித்தி பொய்மையாம் களையை வாங்கி பொறை எனும் நீரைப்பாச்சி தம்மையும் நோக்கிக்கண்டு தகவு எனும் வேலி இட்டு செம்மையுள் நிற்பராகில் சிவகதி விளையும் தானே''

எனக் கூறுகின்ருர். ஆதலினுலே கடவுள் அருளைப் பெறவிரும்பும் எவனுக்கும் எந்தச் சமயத்தவனுக்கும் உண்மை வேண்டும். உண்மை பேச வேண்டும். வாழ்வு உண்மையில் அமைய வேண்டும். அதில்லாமல் வேடம் போட்டுக் காட்டி சமயம் எனச் சொல்ல முடியாது. அடுத்து உண்மை வாழ்வில்தான் கடவுள் அருள்பெறும் விருப்பத்தைக் கொள்ள வேண்டும். இந்த நிலையில் மிகப் பொறுமையுடன் நடந்து கொள்ள வேண்டும். இதை அல்லாமல் வேறு வழி இல்லை. காமம் பொருமை கோபம் ஆங்காரம் உலோபம் அவா முதலியவை நெற்பயிரினை மூடும் களைபோன்றது! இதனை அகற்றினுல் தான் உண்மை வழி பிறக்கும்.

இவற்றை அகற்றினுல் தான் கருணை பிறக்கும்! கருணை வந்ததும் சிவன் ஒளி தானுசத்தெனபடும் என்பது நாயன்மார் காட்டும் நன்நெறிகள். இதை விடுத்து ஏதும் நலம் மறியா மடாதபதிகளை மற்றைய சுவாமிஜீக்களை நம்பி எல்லாப் பழி பாவத்தைச் செய்தாலும் இவரிடம் சென்ருல் நமக்கு நலம்வரும் என்ற பேதை எண்ணத்தை கைவிடுங்கள்!

இன்றைய பேதமையான போலிச் சாமிகளைவிட்டு உண்மை தெளிய விருப்பினுல் கீழே தரப்படும் தேவாரத்தை நாம் இப்பொழுது ஆராய்வோம். அப்பதிகத்தில் 6வது பாடலில் சிவன் (கடவுள்) எப்படியானவர் என்றபோது.

''தேவரும் அமரர்களும் திசைகள் மேல் உள்ள தெய்வமும் யாவரும் அறியாததோர் அமைதியால் தழல் உருவினுர்.மூவரும் இவர்என்னவும் முதல்வரும் இவரென்னவும் மேவ அரும்பொருளாயினுர் மேயது விளநகரதே''

எனத் தெளிவுபடக் கூறுகின்ருர். இந்த ஒரு பாடலை நாம் தெளிந்து கொண்டு சுருதி யுத்தி அனுபவம் மூன்றினுலும் சிந்தித்தால் அதன் உண்மை தெளிவாகின்றது. சுருதியின்படி கடவுள் இவ்வணம் என்று யார்க்குமே தெரியாது. ஆனுல் அன்பராயினுர்க்கு எய்தப்பெறும் என்பது சுருதிகளின் துணிந்த முடிவு. வேதம் நான்கிலும் மெய்ப்பொருள் இதுதான். இதை யுத்தியில் வைத்து தெளிவதானுல். இந்த ஒரு நிலையை இன்னெருவர் காட்டக்காணலாமோ. அது யுத்திக்குப்பொருந்துமோ? ஒருக்காலும் பொருந்தாது! இன்னெருவர் காட்ட இப்பொருள் காணமுடியாது! என்பதை திருநாவுக்கரசர், ஒரு தேவாரத்து,

''காண்பார் யார் கண்ணுதலார் காட்டாக்காலே''

எனக் கூறுகின்ருர் இதை மாணிக்கவாசகரும் ''அவன் அருளாலே அவன்தாள் வணங்கி'' எனக் கூறுகின்ருர். இதை எல்லாம் அருணகிரியார் தமது பாடலில் ''யானுகிய என்னை விழுங்கி வெறும் தானுகி நின்றது தற்பரமே'' எனக் கூறிடுகின்ருர். இதன் அர்த்தம் யாது என்பதை நாம் விளங்கிட வேண்டும். தற்பரனுன பொருள் தானுகவந்து தன்னை விழுங்கிக் கொண்டது. இதனை மாணிக்கவாசகரும் ''தானே வந்து எம்மைத் தலையளித்து ஆட்கொண்டருளும் வான்வார் கழல் பாடி'' எனவும் கூறிடுகின்ருர்.

இந்த வகைவிடுத்து குருமகாராஜீ சகிபாபா இவர்களதும் அல்லது ரமணர் முதலியோர் கூறுவதும் ஒளி அன்று: இது ஏதோ தேவதைவாலாயமாக இருக்கலாம்.

தேவதைகள் பலவும் ஒளியுடையன. ஆகையால் அவற்றின் வசியத்தால் சில ஒளிகள் தோன்றக் காட்டலாம். இப்படியாக நயினுதீவைச் சேர்ந்த சாமியார் செய்தவர்: இதைக் கண்டதாக சில பேர் என்னிடம் கூறியவர்.

ஆகையால் இந்த சாமிகளை இனியும் நீங்கள் நம்புவது பொருத்தமானது அன்று. சம்பந்தர் தேவாரத்தை நன்கு படியுங்கள். அதைப் படித்திடும்போதே உம்மை அறியாத பேரின்பவிளைவு மனச்சாந்தி உங்களிடம் பெருகும். தமிழ் மக்களே! மீண்டும் சொல்கின்ருேம் இலங்கையிலோ இந்தியாவிலோ உள்ள எந்த மடாதிபதிகளையும் பெரியவர் என எண்ணுதீர், அவர்கள் எவராதல் சிவன் அடியார்க்குரிய நற்கோட்பாட்டில் இல்லை. இந்த மடாதிபதிகளிடம் பல பணம் படைத்தோர் சென்று சிக்கி பல அல்லலை அடைந்து கொண்டதை நாம் அறிவோம்; உண்மையில் மடாபதியாக இருப்பவர் அனைவரும் சைவநன்நெறிக்கு புறம்பானவர். அவர்களது நடத்தை வேடம் கோலம் அத்தனையும் நாயன்மார் நடந்து கொண்ட வழிகட்கு முற்றிலும் முரணுவது.

எந்த மடாதிபதிகளையும் வணங்கிய யாரும் உய்தி அடையவும் மாட்டார்கள். அல்லது பேரின்ப வழிக்கு ஆளாகவும் மாட்டார்கள். இதை உங்கள் நலன்கருதியும் நமது தமிழ் மக்களின் நலன் கருதியும் எடுத்துக் கூறுகின்றேன். திரும்பவும் சொல்கிருேம். நாயன்மாரது வழியே உங்கட்கு நலம். அவர்களது வழி தருமத்தில் அத்திவாரமிடப்பட்டது; போதனையில் அன்று!

தருமமே உருவாகச் சமைந்த கடவுளை தருமமூலமாக அறியலாமே அன்றி இந்த கபடவேட சாமிகளால் அறியமுடியாது. இப்பால் எம்பிரான் சம்பந்தரின் பதிகம் காண்கிறீர்கள், உங்கள் வாழ்வு நலமுடன் சிறக்கும் விதி இருந்தால் அந்தப் போலிகளை விடுத்து உண்மைக்கு வருவீர்கள்.

# கோவில் என்பது பூரண அமைதியில் இருக்கவேண்டியது. ஆடம்பர விழாக்கள் என்றும் அக்கோயில் அருளை பாழாக்கும் எனக் காட்டும் திருப்பதிகம்

## தமிழினமே நீ சிறந்து வாழ விரும்பின் நாயன்மாரது வழியைப் பின்பற்று

பண் — காந்தாரம்

திருச்சிற்றம்பலம்

ஒளிரிளம்பிறை சென்னிமேல் உடையர் கோவணஆடையர்
குளிரிளம்மழை தவழ்பொழிற் கோலநீர் மல்குகாவிரி
நளிரிளம்புனல் வார்துறை நங்கைகங்கையை நண்ணினுர்
மிளிரிளம்பொறி அரவினுர் மேயதுவிள நகரதே.

ஒளிரும் இளம் பிறை திருச்சடைமீது அணிந்து கொண்டவர். முழந்தாள் மேல் அணிந்த கோவணத்தை ஆடையாக அணிந்தவர்; குளிரும் நீர் திவலைகள் பொருந்திய இளம் மேகங்கள் தவழும் சோலைகட்கு குன்ருத கோலமுடைய நீர் பெருக்கும் காவிரியாற்றின் இளம் பருவத்து நீர் பெருகும் நற்துறையினிடத்து (கரையினிடத்து) கோயில் கெகண்டு கங்கை ஆற்றைச் சடைமீது வைத்துக்கொண்டிருப்பவர். அவர் மிளிரும் இளம் பொறிகள் உடைய பாம்பினை அணிந்து கொண்டவர். இவர் வீற்றிருப்பது திருவிளநகர் என்னும் சிவாலயத்திலாகும்.

காவிரியின் நீர் கோலத்தால் சிறந்தது. பலருக்கும் பயன்படுதலாலே புண்ணியம் மிக்கது. அதன் கரையில் இருப்பது விளநகர் என்னும் சிவாலயமாகும். ஆதலால் துறை எனக் கூறப்பட்டது. காவிரியின் புண்ணியம் அதனைச் சிறப்பிப்பது கூறப்பட்டது.

புண்ணியங்களுள் சிறந்தது மரம் நாட்டும் புண்ணியம், மரங்களை நாட்டி நீர் வார்த்து அவைகளை வளரப்பண்ணினுல் அது மிகப் புண்ணியம் என்றும்; அச்செயலால் நரக வேதனை நீக்கப்படும் என்பதும் நூல் துணிபு ஆகும். 1

அக்கரவ்வணி கலனென அதனெடார்த்ததோர் ஆமைபூண்டு
உக்கவர்சுடு நீறணிந் தொளிமல்குபுனற் காவிரிப்
புக்கவர்துயர் கெடுகெனப் பூசுவெண்பொடி மேவிய
மிக்கவர்வழி பாடுசெய் விளநகரவர் மேயதே.

எலும்பு மாலையும் பாம்பும் அணியும் ஆபரணமாக அதனோடு சேரக் கட்டியதோர் ஆமைபூண்டு இறந்து உக்கியவரின் சுடும் நீற்றைப் பூசி ஒளி விளங்கும் நீர் பெருக்கமுடைய காவிரியாற்றில் நீராடுவார் தம்துயர் கெடுக என பூசுகின்ற வெண்மையான திருநீறு அணிந்து மேலான பெரியோர் வழிபாடு செய்யும் திருவிளநகர் என்னும் தலம் அவர் வீற்றிருப்பது.

காவிரியாற்றின் புனிதம் பற்றி அதனுள்புக்கவர் துயர் கெடுக என வெண்ணீறு பூசுவார் எனக் கூறப்பட்டது.

காவிரிபுக்கவர் என்றது காவிரியின் இயல்பான தண்ணளி பெற்றுக் கொண்டவர் என்பதாடும். தண்ணளியாய இரக்கமுடன் வாழ்வார்க்கு என்றும் துயரில்லை என்பதாம். துயர் நீங்கவே வெண்பொடி பூசப்படுவது என்பதாகும்.

உலகில் உள்ள மக்கள் தமக்கு சஞ்சலம் மிகும்போது மேனிநிறைய திருநீறணிந்து சற்றே அமைதியாக இருந்து தியானம் செய்யுமாறு சிவன் உபதேசித்ததாக வேதம் கூறும் விழுப்பொருளாகும்.

நீற்றினை மேனி நிறையப் பூசி நித்தலும் தியானித்திருப்பதை நியமமாகக் கொள்ளுங்கள் உங்கட்கு பிணி சஞ்சலம் ஏற்படாது என திருநாவுக்கரசர் கூறுகின்றமை இங்கு குறிப்பிடப்பட்டிருக்கின்றது.

பூரண நம்பிக்கையுடன் இதைச் செய்துவரின் தீங்கு என்றுமே ஏற்படாது. 2

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாளிசேரடங் கார்மதில் தொலையநூறிய அம்பின்வேய்த்
தோளிபாகம் அமாந்தவர் உயர்ந்ததொல்கடல் நஞ்சுடன்
காளமல்கிய கண்டத்தர் கதிர்விரிசுடர் முடியினர்
மீளியேறுகந் தேறினர் மேய்துவிள நகரதே.

துயர் புரியும் அம்புகள். தொலைவிலாது தோன்றித் துயர் புரியும் நிலை கொண்டு தருமம் இரக்கம் இரண்டிற்கும் கட்டுப்படாத அசுரரது மூன்று மதில்களும் தொலைய அழித்த அம்புடன், மூங்கில் போல் வனப்புடைய தோள் கொண்ட உமையம்மையை பாகமாகக் கொண்டு வீற்றிருப்பவர். உயர்ந்த பழமையான கடலில் தோன்றிய நஞ்சுடன் கருமை தங்கிய கண்டம் உடையவர். ஒளி பிரகாசித்து பரக்கும் முடியினை உடையவர். வலியால் மிகுந்த இடபத்தை மகிழ்வாக வாகனமென ஏறிக் கொண்டவர். அவர் வீற்றிருப்பது திருவிளநகர் என்னும் தலமாகும்.

அடங்கார் என்பது தருமமும் இரக்கமும் இலாதவர் என்றதாகும். வாளி என்பது அம்புகள் துயர் புரியும் நிலை உடையன என்பது பொருள். துயரம் புரிவார் என்றுமே இது போதும் என மனம் நிறைவு காணமாட்டார் என்பதால் அடங்கார் எனப்பட்டது. 3

கால்விளங்கெரி கழலினர் கையிலங்கிய வேலினர்
நூல்விளங்கிய மார்பினர் நோயிலார்பிறப் பும்மிலார்
மால்விளங்கொளி மல்கிய மாசிலாமணி மிடறினர்
மேல்விளங்குவெண் பிறையினர் மேயதுவிள நகரதே.

திருப்பாதத்து அணிந்து விளங்கிடும் நெருப்பைப்போல் பிரகாசமுடைய சிலம்பை உடையவர். திருக்கையில் சூலமாகும் வேல் உடையவர். பூநூல் விளங்கும் திருமார்பர். தமக்கு என்றுமே நோயில்லாதவர் பிறப்பும் இலாதவர் கண்டார் மயங்கும்படி ஒளிகொடுக்கும் மாசு இலாத அழகிய நீலகண்டம் உடையவர். திருச்சடை மேலாக விளங்கும் வெள்ளைப்பிறை சூடியவர் வீற்றிருப்பது திருவிளநகர் எனும் கோயிலாகும்.

இப்பதிகம் சிவனது தியானம் போல்வது. திருப்பாதத்து அணிந்த சிலம்பு விளங்கி எரியும் நெருப்பைப் போல்வது. நெருப்பு இல்லாமல் உலகம் வாழாது. ஆகவே திருப்பாதம் நெருப்பாகவே இருக்கின்றது. ஒளியுடன் ஓசையும் கொண்டுள்ளது நெருப்பு என்பதால் எரிகழலினர் என்கின்றார். கழல் சிலம்பு என்பதாகும். ஒளிக்கு ஒளிகொடுப்பது திருப்பாதம் என்பது பொருள்

கையில் பிரகாசிப்பது சூலம். சூலம் அதர்மத்தை அழித்து தர்மத்தை நிலைநாட்டவாகும். ஆதலால் அழித்தலால் அருள் சுரக்கும் நிலையே சூலமாகும். ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய் என்பது மாணிக்கவாசகர் கூற்று. திருவருள் ஒருவரிடம் தோன்று முன்பு முற்றாகத் தீங்குகள் நீக்கப்படல் வேண்டும். நெஞ்சில் நூல் என்பது கலைகளைக் குறித்தது. அறிவுக்கறிவாகி எல்லாக் கலைகளையும் ஓதாது உணர்த்தும் நிலையாவது. எம்பிரானிடம் நோய் இல்லை அல்லது பிறந்தவரல்லர்; பிறப்பிருந்தால் மரணம் தோற்றும் ஆகையால் பிறப்பிலாதவர் என்கிறார். நஞ்சு தங்கிய கண்டம் நீலநிற ஒளியாக மிளிர்வது. அந்த ஒளி எவரையும் தன்வசப்படுத்தும் நிலைமையுடையது ஆதலினல் மால்விளங்கொளி எனப்பட்டது. நஞ்சாக இருப்பினும் அதில் மாசு இல்லை. அவரிடம் உள்ள நஞ்சு வேறுயார்க்கும் தீங்கிழையாது என்பது பொருள். வெண்பிறை சடைமேலாக விளங்குவது. அமுத தாரை பொழியும் பிறையணிந்தவன் பெரியோர்கள் கண்டு எம்பிரானுடைய அருட்கோலத்தில் திளைத்து மெய்மறந்திருப்பார்கள். 4

பன்னினர்மறை பாடினர் பாயசீர்ப்பழங் காவிரித்
துன்னுதண்டுறை முன்னினர் தூநெறிபெறு வாரெனச்
சென்னிதிங்களைப் பொங்கராக் கங்கையோடுடன் சேர்த்தினர்
மின்னுபொன்புரி நூலினர் மேயதுவிள நகரதே.

வேதங்களை ஓதியவர். இசை பொருந்த அவற்றைப் பாடியவர். சீருடைய பழமையான காவிரி ஆற்றின் குளிர்ந்த துறையை இருப்பிடம் என நினைந்தார். தூயநெறிகளை தம்மை வணங்குவார் பெறுவார் என்று திருச்சடைமீது இளம்பிறை கோபத்தால் பொங்கும் நாகபாம்பு கங்கையுடன் சடைமீது சேர்த்திக் கொண்டவர். பொன்போல் மிளிரும் முப்புரி நூலை அணிந்து கொண்டவர் வீற்றிருப்பது திருவிளநகரெனும் திவ்விய தலமாகும்.

திங்களும் பாம்பும் கங்கையுடன் சேர்த்தது தூய்மை பெறுதற்காக எனவும் பொன்போல் மிளிரும் நூல் அணிந்ததும் தவநெறிக்காக எனவும் கொள்ளப்பெறுவது. இதனல் தம்மைச் சார்வாரும் தூய்மைபெறுவார் என்பதாம். 5

தேவரும்மம ரர்களுந் திசைகள்மேலுள தெய்வமும்
யாவரும்மறி யாததோர் அமைதியால்தழ லுருவினர்
மூவரும்மிவ ரென்னவும் முதல்வரும்மிவ ரென்னவும்
மேவரும்பொரு ளாயினர் மேயதுவிள நகரதே.

தேவர்களும் தேவர்களுடன் சேர்ந்த உருத்திரர் முதல் கணங்களும் திசைகள் மேலாக உள்ள தெய்வங்களும் யாவருமே அறிய முடியாததொரு அமைதியாக சிறந்த சோதியின் உருவானவர். அவரையே பிரமா விட்டுணு உருத்திரன் என்னும் மூவரும் இவரே என்னவும் அல்லது வேறு வேறு சமயக்கோட்பாட்டில் நின்று ஆண்டவன் முதல்வன் என போற்றப்படும் அவர் என்னவும் எவராலும் சேர்ந்திட அரிய பொருளாயின பெருமான் வீற்றிருப்பது திருவிளநகராகும்.

ஒன்றவனாய இரண்டவனாய் மூன்றவனாய் எவை எவையாகும் தெய்வமாகிய பொருள் சிவமே! அவரை யாவர் ஒருவரேனும் அறியமாட்டாத அரும்பொருளாய் நிற்கின்றார்.

தேவர்கள் கணங்கள் திக்கிலுள்ள எத்தெய்வமும் அவரை அறிய முடியாது. அவரது அகல நீளம் யாராலும் அறியொணாத பூரண அமைதியால் நிறைகின்ற சோதியாவது. சோதிமயமாகி என்றும் உள்ளது.

குறைவு நிறைவு அறஎங்கும் நிறைவாகி நிற்கின்றது. அதனை அதன் அருளால் தான் காணலாகும்.

அதற்கு அவன் அருள் பெறும் வழியைத்தான் கந்தபுராணம் தெட்டத்தெளிவாக தருமமும் நீதியான நடத்தையும் எனச் சிறப்பாகச் சொல்லி உள்ளது. இதை நம்மக்கள் மனதில் கொள்ள வேண்டும்.

இந்தப் பதிகத்தை எல்லா மக்களும் உணர்தல் மிகநன்று. உண்மையாக கோவிலில் ஒலிபெருக்கி முதல் எந்த வகையான இயந்திரங்களையும் பாவிப்பார் அனைவரும் கேடுறுவர்.

நமது சைவமக்களிடையே தவநெறி அற்றுவிட்டது. பாவம் பெருகிக் கொண்டது. புண்ணியம் குறைந்தளது புண்ணியம் எப்பொழுதும் அடக்கத்தில் இயைந்தது. அடங்காதார் தான் பாவிகள். இதை விளங்கக்கூடிய படித்த மனிதர் இல்லாதது மிக வருந்தத்தக்கது.

இன்றைய சமயக்கல்வி முறையே அபசாரமாவது. அந்தக் கல்விமுறை முற்றிலும் அகல வேண்டும். நாட்டில் சைவநெறி தழைக்க வேண்டின் இன்றைய சமயக்கல்வி முறை திருத்தி அமைக்கப்படல் வேண்டும்.

சமயக்கல்வியால் ஒரு மாணவனை நற்பண்புடையவனுக்க வழி காண்பதே அன்றி சமயக்கல்வியால் விசர்த் திருவிழாச் செய்யும் பழிபாதகங்களைப் பெருகச் செய்தல் கூடாது; 6

சொற்றரும்மறை பாடினர் சுடர்விடுஞ்சடை முடியினர்
கற்றருவ்வடங் கையினர் காவிரித்துறை காட்டினர்
மற்றருந்திரள் தோளினர் மாசில்வெண்பொடிப் பூசினர்
விற்றரும்மணி மிடறினர் மேயதுவிள நகரதே.

சொல்லாகவரும் வேதங்களைப் பாடியவர். சுடர்விட்டு ஒளிரும்சடைமுடியினை உடையவர். கல்லால் ஆன ஓர் மாலை கையில் ஏந்தியவர். காவிரியாற்றின் கரையில் சிறந்த புண்ணிய விளைவுகளைக் காட்டினர். மலைபோலத்திரண்ட தோளினை உடையவர். மாசுஏதும் இல்லாத வெண்பொடியாய திருநீற்றை பூசியவர். ஒளிபிரகாசிக்கும் நீலமணி போன்ற கண்டம் உடைய பெருமான் வீற்றிருப்பது விளநகர் எனும் தலமாகும்.

இப்பாடலும் இறைவனது தியானமாக உளது.

வேதங்கள் கருத்தாக இருந்தன அதைச் சொல்லாக அமையும்படி பாடியருளியவர். அப்பெருமானிடத்தே அவை தோன்றின. கருத்தாக இருந்தது சொல்லாக வந்தது.

எண்ணும் எழுத்தும் சொல் ஆனய் போற்றி என் சிந்தை நீங்கா இறைவாபோற்றி என்கிறார். ஆகவே எண்ணங்கள் உதிப்பது சிவத்திடமேயாகும் என்பது தெளிவு. எண்ணியவன் யார் என்பது பெரியோர் நாடுவர். அதுவே ஆராயப்படும் நுண்ணிய பொருளாகும்.

கற்றருவடங்கையில் என்பது கல்லை மாலையாக்கிய வாறன சர்வ வல்லபமாகும்.

இதனை மாணிக்கவாசகர் கல்நார் உரித்தகனியே போற்றி என்கின்றார். கல்லில் நார் செய்வது முடியாத காரியம். அதே போன்று கல்லில் மாலை செய்வதும் முடியாத காரியம். ஆனல் முடியாதன நடைபெற்றுக் கொள்கிறது.

திருநீறு மாசில்லாத வகையாக இருக்க வேண்டும். பசுவின் சாணத்தினல் அன்றி வேறு எந்த வகையாக இருக்கக்கூடாது. பசுவின் சாணத்தினுல் அன்றி வேறு எந்த வகையான திருநீற்றை அணிதல் மனச்சாந்திதராது.

எம்பிரானுடைய கண்டம் நீலமணிபோல் பிரகாசிக்கும். இது எல்லையற்ற இன்பப்பொருளைக் கண்டவாறு பாடியருளினர். 7

படர்தருஞ்சடை முடியினர் பைங்கழல்அடி பரவுவார்
அடர்தரும்பிணி கெடுகென அருளுவார்அர வரையினர்
விடர்தரும்மணி மிடறினர் மின்னுபொன்புரி நூலினர்
மிடறரும்படை மழுவினர் மேயதுவிள நகரதே.

படர்ந்து விளங்கும் சடைமுடியை உடையவர். பசிய சிலம்பணிந்த திருவடிகளைப் போற்றுவாரை அடைந்து பற்றித்துயர் தருகின்றபிணிகள்கெடுக என அருள் செய்யவல்லவர்; பாம்பை அணிந்த திரு அரையை உடையவர். ஒளிதருகின்ற அழகிய கழுத்தை உடையவர்; மின்னிடும் பொன்னிலாய முப்புரி நூலை அணிந்து கொண்டவர். வலிமைதரும் படையான மழுப்படையை உடையவர் வீற்றிருப்பது திருவிளநகர் எனும் தலமாகும்.

எம்பெருமானுடைய திருச்சடை படர்ந்து விளங்கும் படியானது. அவர் திருவடிகளைப் போற்றுவாரை அடர்த்து துயருறுத்தும் பிணிகள் கெடுக என அருளவல்லவர் என்பது தன்னை அடைந்தாரைத் தாங்கும் கருணையாகும். இப்பாடல் எம்பெருமானுடைய தியானமாக அமைவதைக் காணலாகும்.

மிடல்தரும் என்பது மிடறரும் எனவாயிற்று. மிடல் என்பது வலிமையாகும். எம்பிரான் திருக்கரத்தே மழுப்படை கொண்டதன் காரணம் வணங்கும் அடியார்க்கு நல்வலியினைக் கொடுக்கும்படியாகும். பகைவர்க்கு தன் அடியார் அஞ்சாமைக்காகவே மழுப்படை திருக்கையில் ஏந்தியவாறதும். 8

கையிலங்கிய வேலினர் தோலினர்கரி காலினர்
பையிலங்கர வல்குலாள் பாகமாகிய பரமனர்
மையிலங்கொளி மல்கிய மாசிலாமணி மிடறினர்
மெய்யிலங்குவெண் ணீற்றினர் மேயதுவிள நகரதே.

திருக்கையில் பிரகாசிக்கும்சூலவேல் படையை உடையவர். யானைத்தோல் போர்த்தவர். கால்இலாது ஊர்ந்து செல்லும் நச்சுப்பை பிரகாசிக்கின்ற நாகபாம்பின் படம் போன்ற அல்குல் உடைய உமையம்மையார் ஒருபாகமாக அமர்ந்திருப்பக் கொண்ட முதல்வனவார். கருமை விளங்கும் ஒளி பெருகிய மாசில்லாத நீல கண்டம் உடையவர். மேனியில் விளங்கும் வெள்ளைநிறமுடைய நீற்றை அணிந்த பெருமான் வீற்றிருப்பது திருவிளநகர் என்னும் தலமாகும்;

இப்பாடலும் எம்பெருமானுடைய தியானமாகும். இதனைத் கருத்தில் கொள்ளுங்கள். அருட்காரணியான அம்மையுடன் கூடி அருட்செறிவுடன் பொலியும் திருக்கோலம் பேசுகின்றார். 9

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளதன் றனைக் காண்பன்கீ ழென்றமாமணி வண்ணனும்
உள்ளதன் றனைக் காண்பன்மே லென்றமாமலர் அண்ணலும்
உள்ளதன் றனைக் கண்டிலார் ஒளியார்தருஞ்சடை முடியின்மேல்
உள்ளதன் றனைக் கண்டிலா வொளியார்விளநகர் மேயதே.

என்றும் உள்ளதாக ஒரு பொருள் எம்முன் தோற்றுகின்றது. இதன் கீழ் பாகம் எங்கே என்று உள்ள அதனைக் காண்பேன் என்று பன்றியாக வடிவு கொண்டு கிழாகப் போன பெரும் சிறப்பு வாய்ந்த நீலமணிபோன்ற நாராயணக் கடவுளும்; என் முன் தோற்றிய இப்பொருளின் மேல் பாகத்தை நான் காண்பேன் என்ற பெருதாமரை மலர் மேல் இருக்கும் அண்ணல் பிரமனும் உள்ளதாய அதன் அடி முடியினைக் கண்டிலார். ஒளி தந்து நிற்கும்சடை முடியின் மீதாக உள்ள அதனைக் காணமுடியாத வண்ணம் திகழும் ஒளி உடையவர் திருவிளநகர் என்னும் தலத்தில் வீற்றிருக்கின்றார்.

உள்ளது என்றது குறைவிலாத நிறைவாகி என்றும் உள்ளது. குறைவிலா நிறைவே கோதிலா அமுதே ஈறிலாக் கொழுஞ்சுடர்க்குன்றே என மாணிக்கவாசகர் கூறுகின்றார்.

குறைவு நிறைவு அற எங்கும் நிறைந்து நிற்கின்றபொருள் ஒன்றேயாகும். என்றும் உள்ளது. அது இல்லாது வானம் இல்லை காற்று இல்லை நெருப்பு நீர் மண இல்லை. மண்மேல் மனிதர் முதல் எந்த வகைச் சீவராசியும் இல்லை.

பூரண அம்மதியாக எல்லாவற்றையும் தாங்கிக் கொண்டு தன் கருணையின் பெருமை காட்டி நிற்பது அது ஒன்றேதான்.

பார்க்கின்ற கண் கேட்கும் செவி சுவைக்கும் நா, மணக்கும் மூக்கு முதல் அனைத்தும் அதன் அருளால் நிகழ்வது. அதுவே பிரமவிட்டுணுக்கள் நடுவாக சோதியாகத் தோன்றி ஆதியும் அந்தமும் அறியாவகை நின்றது. இதைக் கண்ட பிரமனும் விட்டுணுவும் ஆதியும் அந்தமும் அறியத் தலைப்பட்டனர். காணமுடியவில்லை. ஆனால் அது படர்ந்த சடைமீது இளம்பிறை நாகம் நகுவெண்டலை கங்கை வெள்எருக்கு வன்னி கொன்றை ஊமத்த மலர் முதல் பலவும் அணிந்து என்றும் ஒளியுடன் திகழ்கிறது.

அளப்பரிய சோதிதான் அவரது திருவுருவமாக விளங்கி என்றும் அதன் இயல்பைப் பார்த்தறிய முடியாத ஒளியார் இருப்பது திருவிளநகர் என்னும் தலபாகும் என்றார்.

காணமுடியாது எனினும் காண்பார்க்கு ஏற்றவடிவம் ஒளியார்தரும் சடைமுடி எனக்கூறி அதன்மேல் உள்ளதையும் பிரமவிட்டுணுக்கள் கண்டிலார் எனக் கூறுகின்றார்.

பெறுதற்கரிய மானிடப்பிறப்பில் இதனைக் காணலாகும் என்பது குறிப்பால் கூறி பிரமவிட்டுணுக்களின் ஆற்ருமை கூறுகின்றார். 10

மென்சிறைவண் டியாழ்முரல் விளநகர்த்துறை மேவிய
நன்பிறைநுதல் அண்ணலைச் சண்பைஞானசம் பந்தன்சீர்
இனபுறுந்தமி ழாற்சொன்ன ஏத்துவார்வினை நீங்கிப்போய்த்
துன்புறுந்துய ரம்மிலாத் தூநெறிபெறு வார்களே.

மெல்லிய சிறகுடைய வண்டுகள் யாழ்போல் முரலும் திருவிளநகர் என்னும் தலத்தில் மேவிய நல்ல இளம்பிறை போன்ற நெற்றி உடைய கடவுளாகும் சிவமூர்த்தியை சண்பை நகர் என்னும் சீகாழி நகரில் தோன்றிய திருஞானசம்பந்தன் நல்ஒழுக்கம் தலைநின்ற சீரால் சிவனை அறிந்து கண்டு இன்புற்று எழுந்த தமிழால் சொன்ன இப்பாடலைப் பாடி எம்பெருமானைப் போற்றுவார் தமது வினையாயின நீங்கிச் சென்று துன்பப்படும் துயரம் இலாத தூயநெறிகளைப் பெற்றுக்கொள்வார்கள்.

சிவனை நினைந்து தித்திப்பாகிச் சிறந்து மகிழ்ந்த மலர்ச்சியால் சிறந்தது இப்பதிகம் என்றதால் இன்புறும் தமிழாற் சொன்ன ஏத்துவார் என்றார்.

ஏத்துதல் என்பது இப்பாடலைப் பாடிப் போற்றுதல் என்பதாகும். ஐயோ எந்தக் கோயிலில் இத்தகைய பாடலை ஓதுகின்றார். அல்லது மக்கள் தனித்திருந்து கேட்கின்றார்கள்.

இப்பாடலைப்பாடி ஏத்துவாரது முன்செய்த வினைகள் நீங்கலாலே துன்புறும் துயர் எக்காலமும் நேராது. இது பொது அறிவிற் தெளிவதொன்ருகும். துன்புறும் துயர் இப்பதிகம் பாடி போற்றுவார் ஏற்படாது என்றதால் தூநெறி பெறுவார் என்கின்றார்.

தூநெறி என்பது தூயவாழ்க்கை என்பதாகும். இப்பாடலாய தமிழை பாடிவருவார் பொய் கபடம் வஞ்சனை முதலிய பழுதுகளில் சிக்கார் என்கின்றார்.

பொய் பேசுவார்க்கு அகம் நெகிழ ஊறும் சிவானந்தம் எய்தப் பெறூு. ஆதலால் சீருடைய தூய வாழ்வு கிடைத்து விட்டால் சிவாநுபூதிதாமாக ஏற்படும் என்பது தெளிவு.

# கந்தவனக் கடவையில் தருமத்தின் தூயவிளக்கமிருந்தால்

## வழிபடும் மக்களின் சஞ்சலம் ஏற்படக்காரணமில்லை

கீழே ஒரு கடிதத்தைக் காண்கிறீர்கள்: இக்கடிதம் எழுதியவரை நான் அறியேன். ஆனால் அதில் காட்டப்பெற்ற சில கருத்துக்களை நம் சைவமக்கள் உணர்ந்து இனியாதல் திருந்திக் கொள்வாரா? என்பதற்காக அக்கடிதத்தை நாம் பிரசுரிக்கிறோம். இன்று நமது தமிழினம் பல அல்லல்பாடுகளால் எழுந்த சிறுமைச் செயலால் பீடிக்கப்படுகிறது. நேராகப் பேசும் திடமிலாத கோழைத்தனங்கள் இருக்கின்றன. ஓர் ஆலயத்தை நல்ல முறையில் எல்லாருக்கும் நன்மை பயக்கும் வகையில் நடத்த முடியாதபடி சைவ உலகம் மிகத் திண்டாட்ட மடைகின்றது. தமது அரசியல் பகை குடும்பப்பகை பொருமை இவைகளை வைத்து பகை பாராட்டி நீதியற்ற வகை நடந்து நான் நினைத்தபடி செய்வேன் நீர் ஆர் கேட்கிறது என்ற ஒரு முரட்டுக் கௌரவம் தலைதூக்கி பல கோயில்களின் நலன்களை நாசமாக்கிவிட்டது. கடவுள் இருப்பிடத்துச் சென்று நாம் கருத்து வேற்றுமைகளை மறந்து சீரான ஓர் அன்பு நிலையில் இரக்க மனப்பான்மையில் நடக்கமுற்பட்டால் எந்தக் கோயிலிலும் எந்த ஒரு காலத்திலும் தீங்குகள் தவறுகள் ஏற்படாது.

இதற்காகத்தான் கோயிலில் ஒலிபெருக்கி உயர்வு தாழ்வு பேசும் கூட்டங்கள் பிரசங்கங்கள் உபசாரங்கள் யாவும் வேண்டாம் ஏகப்பட்ட அன்பின்வழி நன்முறைப்படி ஒழுகுங்கள் எனக் கருத்துத் தெரிவித்தோம்.

ஆனால் எல்லாருடைய நன்மையையும் கருதி தருமநிலையைச் சொல்லும் நமது நல்வார்த்தையை இன்னமும் துாபப்படவேண்டிய பகைப் பிணியால் பீடிக்கப்படும் தமிழ் இனம் ஏற்கச்சங்கடப்படுகின்றது.

போலிக் கௌரமும் பணவாசையும் நான் பெரிசு நீ பெரிசு என்னும் பேதைக்கொள்கைகளும் நமது தமிழ் சமுகத்து நன்கு வேரூன்றிவிட்டன.

இவ்வளவு துயரத்தை நாம் நித்தலும் அநுபவித்தும் இனியாதல் எமது துயரங்கட்கு உரிய மூலகாரணத்தை சிந்தியாதிருப்பது தவறு அல்லவோ?

பத்திரிகையின் கடமையில் நமக்கு அனுப்பப்படும் கடிதங்களை பிரசுரிக்க வேண்டியதானமையால் இக்கடிதத்தை இங்கு பிரசுரிக்கிறோம். நாம் யார் மீதும் பகையோ சார்போ கொள்ளாதபடி இக்கடிதத்தை தரும அடிப்படையில் பிரசுரிக்கிறோம்.

### குறிப்பிட்ட கடிதம்

கடந்த 22-6-81 அன்று ஆயுதம் தாங்கிய பொலீஸ்படையின் அதிகாரப்பார்வையின் கீழ் பொலிகண்டி கந்தவன ஆலய மஹாகும்பாபிஷேகம் பொலிகையூர் மக்கள் மிகவும் மனம்வருந்த கோயில் பிரதம குருக்களுக்கு வயிற்றிலடித்து சர்வாதிகார நிர்வாகி திரு. செல்லையா பிள்ளை யோகேந்திரனால் நடாத்தப்பட்டது. இக்கோவிலை ஓர் நிர்வாக சபைக்குக் கீழ் கொண்டுவரும் ஊரவரின் முயற்சிக்கு ஒத்துழைப்புக் கொடுத்தார் பிரதமகுரு. அவருக்குப் பதிலாக கடமையாற்றிய குருவுக்கு தகுதி காணாது என்று காரணம் காட்டி அப்பகுதியில் சில சமஸ்கிருதம் பாடும் சமயத்துரோகிகள், சாதி வெறியர்கள், ஆகியோர் திட்டம் தீட்டி சர்வாதிகாரி யோகேந்திரனுக்கு ஒத்தாசை கொடுத்து பிரதம குருக்களுக்கும் அவர் குடும்பத்திற்கும் வயிற்றிலடித்தார்கள். இந்த நேரம் பார்த்து தம் தலையைக் காட்ட முற்பட்டார் நீர்வேலி சந்திரசேகரக் குரு, அவருக்கு பக்கபலமாக வந்து தானும் ஒருவராக சர்வாதிகாரிக்கு உதவி புரிந்து பிரதம குருக்கள் குடும்பத்தின் வயிற்றில் அடித்து, கும்பத்திற்கு ராஜபுஸ்பம் சமர்ப்பிக்காமல், கும்பங்களை வெளி வீதிவலம் கொண்டாமல் கிரியைகள் பிழையாக கும்பாபிஷேகம் செய்தார் கீரிமலை சிவன் கோயில் பிரதமகுரு நகுலேஸ்வரக் குரு. கோயில் பிரதம குருவுக்கு எதிராக இவர்கள் வந்த பலன் பல சமூக மக்களும் இருந்து உணவு உண்டு படுத்து உறங்கும் சத்திரத்தில் தங்க நேரிட்டது. ஏழு ஆண்டுகள் காகம் போட்ட எச்சம் இன்றும் கோயில் மேல் தீராந்திகளில் உண்டு. தீர்த்த கிணறு இறைக்கவில்லை. மோதகம் முழுக்க மண். அபிஷேகம் செய்யும் தீர்த்தம் ஓடாமல் துர்நாற்றம் இவற்றிற்கு எல்லாம் மத்தியில் கும்பாபிஷேகம். குருக்கள்மார்கள் மஹா மண்டபத்தினுள் கேற்றிலில் தேநீர், குண்டுக் கோப்பையுடன் பாலில்லையாவென இந்தியாவிலிருந்து வந்த குருமார் வேதலை, அவர்களுக்கு உணவு இல்லை. சோடா தாகந்தீாத்தது. தீர்த்தமும் இல்லை. விபூதி இல்லை. கறிமஞ்சல் கரைத்து வைத்து பலருக்கு நெற்றி அவிந்து விட்டது. மாவிட்டபுரம் ராசாக் குருக்கள் சோடாப் போத்தலில் தேத்தண்ணீரும் குண்டுப்கோப்பையும், சுந்தரமூாத்தி ஐயர் மடியிற்குள் மணிலாக் கொட்டை கொறித்தபடி மஹா மணடபத்திற்குள், நீர்வேலி சுப்பண்ணுக்குரு ரொட்டியுடன் கிருஷ்ணர் யாகம். ரொட்டி தின்பதும் பூசை செய்வதும், நீர்வேலி சந்திரசேகரகுரு வாழைப்பழம் உரித்து தின்றபடி. இது கும்பாபிஷேகமா என பலர் கேட்டார்கள். இதற்காகதான் பிரதம குருக்களை இல்லாமல் இந்த ஐயர்மார் வந்தவர்கள் போலை எனறார் இன்னொருவர். களஞ்சியத்திற்குள ரத்தினமும் மருமகள்மாரும் கும்மாளம், சாராய வாடை, யோகேந்திரனும் ஒரு சட்டத்தரணியும் சாறாயப் பார்ட்டி. இநத அநியாயத்தை எடுத்துக்கூறிய ஒரு வாலபர்கள் பொலிஸ் பாதுகாப்பில், இத்தனை அக்கிரமத்தின மத்தியில் கும்பாபிஷேகம். ஒரு இடத்திலிருந்து ஒலிபெருககியில மந்திரமோத ஒன்பது கோயில் சாமிகளுக்கும் கும்பாபிஷேகம் முருகா உனக்கு இந்தக் கதியா? அம்பாள் களவெடுத்த மணியம் இரத்தினம் ஆனைப் பந்தியில், இப்படியான போட்டி பொருமை பிராம்மண குலத்திற்கு தேவையா? மாவிட்டபுரத்திலிருந்து ஓர் செவிட்டு மிஷின் பூட்டிய சொத்து ஐயர் இப்பா பூஜை. அவரால் குடம் தூக்க முடியவலலை தண்ணீரை நிலத்துல ஊற்றிப்போட்டு சாமிக்கு அபிஷேகம் செய்ததாக பாவனை காட்டுகிறார். இது என்ன பாவம். கேட்க ஆளில்லை. இது அநியாயம். முருகா உனக்கு இக்கதியா. எண்ணை வையாமல் பழைய ஆறுமுகசாமி வெள்ளையடிக்கிறது. தயவு செய்து இதை விளம்பரப்படுத்தி பிராமண குலத்தைத் திருத்தி இந்து சமயத்தை காப்பது உங்கள் கடமை.

இப்படிக்கு
புலவர் சீனித்தம்பி
கைலை வாசம்
வல்வெட்டித்துறை

# வேதாந்த மடத்தில் வினைக்கேடுகள்

## கக்கூசு பூட்டி கதவடைப்பு

## சாமான் தூக்கி எறி, சண்டை வாக்குவாதங்கள்

சமாதிவைக்கும் இடங்கள் ஒழுக்கம் தவறும் என்பதற்கு சான்ருகவோ என்னவோ தெரியாது யாழ்ப்பாணம் வேதாந்த மடம் இன்று மிகு அல்லோல கல்லோலப்படுகிறது.

வேதாந்த மடத்தில் எவரேனும் சைவ நன்நெறியில் அன்பு தவநெறி தன் உயிரையும் பிறஉயிர்போல் எண்ணல் ஏதுமே இன்றி மிருகவெறி பிடித்த நிலையில் தலைதடுமாறி நடக்கின்றனர்.

எம் யாழ்ப்பாணத்தில் உள்ள சைவ அறநிலையங்கள் யாவிலும் இந்த ஆட்சி கைப்பற்றும் அவாவால் பல பழுதுகள் நிகழ்கின்றன.

வேதாந்தம் வீணர்க்குரியபொழுதுபோக்கு என்பது நன்ருக தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. வேதாந்தமென்பது வேட்கை ஒழிந்த இடம் என திருமூலா சொல்லியும் ஏன் இந்த வெறி ஆட்சி வேட்கை?

இவர்கள் திருநீறு பூசாமல் எப்படி நடந்தாலும் நாம் அதை அக்கறை கொள்ளோம். திருநீற்றையும் பூசிக்கொண்டு ஏன் இந்த வில்லங்கம்?

தான் ஒழுக மாட்டாதவர் வகுப்பு நடத்தி என்ன பயன்? தியானம் செய்து என்ன பயன்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### நிர்வாணச் சிலையுடன்

# பெருமாளுக்கு பெரிய கோபுரம்

## முன்புள்ள பாடசாலையில் மாணவன் பசியாற் சோகம்

வண்ணை வெங்கடேசப் பெருமாள் கோயிலுக்கு முன்பாக உள்ள சன்மார்க்க வித்தியாலயத்தின் உப அதிபரைச் சந்திக்கச் சென்றிருந்தேன். உப அதிபர் அங்கில்லை அதிபர் திரு. மகேசன் மட்டுமே அங்கிருந்தார். அவர் முன்னாக ஒரு சிறு மாணவன் கையை நீட்டியபடி நின்றான். அதிபர் தடியை ஓங்கியபடி அடிக்கஇருந்தார். என்னைக் கண்டதும் அதை நிறுத்தி பையனுக்கு அடிக்கப் போகின்றேன் என்றார், பாவம் இன்றைக்கு மன்னியுங்கோ என்றேன். அதிபர் அவ்வேளை அப்பையனை நோக்கி அந்த ஐயாவுக்காக உன்னை மன்னித்து விடுகின்றேன் இவர் ஓர் சிவனடியார் தெரிந்ததோ என மாணவனைக் கேட்டார். நான் அதிபரிடம் இப்பிள்ளை என்ன வில்லங்கம் செய்தாரெனக் கேட்டேன், அப்பொழுது அதிபர் வேறொரு சிறு மாணவனைச் சுட்டிக் காட்டி அவனுடைய கையை நுள்ளிப் பிய்த்து விட்டான் என்றார். ஏன் மகனே அப்படிச் செய்தாய் என்று கேட்டேன். அப்பிள்ளை நமக்கு பதில் கூறமுன் அதிபர் என்னை நோக்கி இப்பிள்ளைகள் மத்தியானம் ஒன்றும் சாப்பிடுவதில்லை, பசிக்கொடுமையில் ஆளை ஆள் பிடித்துத் தின்கின்றார்கள் என்று அதிபர் சொன்னதும், அடி வாங்க இருந்த பிள்ளையின் கண்கள் கலங்கி கண்ணீர் பெருகிக் கொண்டே நின்றது. நான் பிள்ளையைப் பார்த்து உண்மை தானா? நீ சாப்பிடவில்லையா? என்றதும் வாய்பொருமிய நிலையில் தான் சாப்பிடவில்லை என்பதைத் தலையால் அசைத்துக் காட்டியது. நான் உடனே என் மடியிலிருந்த சிறு நாணயத்தைக் கொடுத்து நீ சென்று சாப்பிடும் என்று சொன்னேன், குழந்தை பணத்தை வாங்க மறுத்து வீரிட்டு அழுதது. அப்போது அதிபர் சொன்னார். பெரிய பரிதாபமான செயல் தான் ஐயா, நீங்கள் காசு கொடுக்க வேண்டாம். இப்பிள்ளையின் தந்தை நன்றாக உழைப்பான் உழைத்து மது அருந்திவிட்டு வீட்டில் ஒன்றும் கொடுப்பதில்லை. இதனால் இப்பிள்ளைக்கு மிகவும் சங்கடம் என்று கூறி அப்பிள்ளையின் கைநாடியைப் பிடித்து அதன் பரிதாப நிலையைப் பார்த்துக் கொண்டு கவலையுடன் இருந்தார். இந்நிலையில் நான் விடைபெற்று மீண்டு கொண்டேன்.

சைவ இளைஞர்களே! இக்காட்சி உங்கள் உள்ளத்தை உருக்கவில்லையா? தமிழ் மக்களுக்காக உயிர் கொடுப்போம் என்றெல்லாம் கதறி உங்கள் செல்வ உழைப்பெல்லாம் அரசியல் வாதிகளுக்கும், ஆடம்பரச் சாமிகளுக்கும் ஆர்ப்பாட்டமான திருவிழாக்களுக்கும் இறைத்து மகிழும் நீங்கள் மாசற்ற ஒரு இளங்குருத்து எப்பாவமுமறியாத மழலைச் செல்வம் சந்தோஷமாக கல்விகற்க வேண்டிய நேரத்தில் பசியால் கண்ணீர் விடக் கண்டு மகிழ்கின்றீரா? இரக்கத்தை இழந்து மிருகங்களாக வெறிகொண்டலையும் சைவ சமுதாயமே உன் வீண் செலவுகளைக் குறைத்து உன் மழலைச் செல்வங்களையாவது காப்பாற்ற மாட்டாயா? சில கோயில்களில் படைக்கப்பட்டு பின் கிடங்கு வெட்டித் தாழ்க்கப்படும் நைவேத்தியமாவது இவர்கட்குக் கிடைக்காதா? உயர்ந்த கோபுரங்களும் சித்திரத் தேர்களும் இந்நிலையில் எங்களுக்குத் தேவைதானா? பல்வேறு கிளப்புகளிலும், சங்கங்களிலும் சேர்ந்து பொருள், காலம் எல்லாவற்றையும் விரயம் செய்யும் சைவப் பிரபுக்கள் இந்தக் குழந்தைகளின் நலனுக்காக ஒரு மாதத்தில் ஒரு நாள் வருவாயாவது செலவிட மாட்டீர்களா? இனியாவது கோபுரம், கதாகாலாட்சேபம் இவற்றை நிறுத்தி இந்த ஏழைக்குழந்தைகளின் நலத்தைப் பேணுங்கள். உங்களுக்கு எல்லா நன்மையும் சுதந்திரமும் • கிடைக்கும். நால்வர் காட்டிய வழியல்லவா ஏழைகள் துயர் துடைத்தல். அவர்களை நம்பி இப்பணியை வழிபாடாக நடத்துங்கள். ஏழைகளின் கண்ணீர் துடைக்கும் பணி எத்தனையோ இலட்சார்ச்சனைக்குச் சமம் என்று சந்திரதீபம் கூறிவருவது இதனாற்றான். இப்பிள்ளை உங்கள் குழந்தையாக இருந்தால் எவ்வளவு துயரப்படுவீர்கள்.

ஆதலினாலே மேடை அமைத்து திருவிழாச் செய்து கோர்ண் பூட்டி லயிற் பூட்டி தருமம் ஏதுவென உணராத மக்களை அழைத்து பிரசங்கம் வில்லுப்பாட்டு முதல் பல சேவலங்களையும் செய்வதிலும் இத்தகைய நிலையில் எம்நாட்டில் வேகமுடன் பரவிவரும் பசிக்கொடுமைகளையும் வாழ்க்கைத்தரக் கஷ்டங்களையும் உணர்ந்து செயல்படுத்தும்படி கேட்டுக்கொள்கிறோம். உண்மையாக வறுமை உற்றோர் வயிறார உண்டு மகிழ்ந்து முகம்மலர்வதைக் கண்டு நீங்கள் பெருவிழாவாக எண்ணி மகிழுங்கள்.

அடுத்து பெருமாள் கோவில் நிர்வாகம் பல பணம் செலவழித்து ஒலிபெருக்கி கோவில் பேரில் வாங்கி சுப்பிரபாதம் விடிய விடிய போட்டு கண்ட பலன் யாது? கோபுரம் கட்டி கண்ட பலன் யாது? கோயில் இருக்கும் பலன் யாது? ஐயமார் பூசை செய்யும் பலன் யாது? இவற்றை தெளிவுபடுத்தி ஓர் கட்டுரை தந்தால் நாம் சந்திர தீபத்தில் பிரசுரிப்போம்;

### இணுவில் கந்தசுவாமி கோயில்

# சைவநெறிக்கு இழுக்கான கோயிலா?

## படித்த பண்டிதர்கள் கோயிலில் பழுதுகளைத் தூண்டுகிறார் செய்திட உடைந்தையாகிறார்

தாயுமானவர் தம்பாடல் ஒன்றில் இந்த உலகத்தில் நல்லவர் யார் என்றால் கல்லாத பேர்களே நல்லவர்கள் நல்லவர்கள் என்று ஒருகால் மட்டும் கல்லாதவரை நல்லவர் என்று சொல்லாது கல்லாத பேர்களே நல்லவர்கள் நல்லவர்கள் என இருமுறை வலியுறுத்திச் சொன்னார். பிரபல தென் இந்திய ஞானியின் உள்ளத்து கற்றவன் அறிவைப் பெற்றும் தன் கல்விச் செருக்கால் எந்தப் பழுதுகளையும் கூசாது செய்யும் ஒருவனாக மாறிவிட்டதை உணர்ந்து கொண்டபடியால் அப்படிச் சொல்ல வேண்டி இருக்கின்றது.

இன்று எமது யாழ்ப்பாணத்தில் அவருடைய வாக்கின் உண்மையை நேரடியாக நாம் காணுகின்றோம். பொறாமை வஞ்சம் களவு ஏமாற்றம் முரட்டுக் கௌரவம் இத்தகை பழுதுகள் பலவும் நமது யாழ்ப்பாணப் பண்டிதர்கள் மணிகள் இரத்தினங்கள் வித்துவான்கள் இவ்வளவு பேரிடமும் தஞ்சங்கொண்டு அவர்கள் போகச் சொன்னாலும் ஐயோ நாங்கள் போகோம் போனால் எங்களுக்கு தஞ்சம் எந்த இடம்? கல்லாதவனை நாம் போய் அணுகின் அவன் கபடமில்லாதவன் பயபத்தி உடையவன் சிறிதாதல் பிற உயிர்க்கு தருமத்திற்கு இரங்குபவன் ஆனமையால் அவனிடம் போய் நாம் என் செய்யலாம் என்று குத்தகைக்கு கொடுத்த காணியில் குடி இருப்பவனை குடி எழுப்பமுடியாதவாறு போல் இந்த படித்த பட்டதாரிகளிடம் குடிகொண்ட பொறாமை வஞ்சம் சூழ்ச்சி தற்பெருமை பாவம் செய்யக் கூசாமை களவு ஏமாற்றம் இவ்வளவும் அவரைவிட்டுப் போக மிகவும் வேதனைப்படுகின்றது அதனாலே படித்தவர்கள் பழுதுகளின் குகையாக்கிவிடுகின்றனர்.

கறையான் புற்றெடுக்க பாம்பு குடிகொண்டவாறு போல பண்டிதமார் என்று படித்துப் பட்டம் பெற்றாரோ அன்று பட்டத்துடன் சேர்ந்து இவைகளும் பட்டத்தைப் பிரபல்யமடையச் செய்யும் மின்னொளியாகின்றன என்று நாம் சொல்லலாம். ஓர் வித்துவான் அல்லது பண்டிதன் பழுதுகளைச் செய்தாலும் பிரபல்யமடையவே விரும்புகிறார்.

எங்கள் யாழ்ப்பாண நாட்டிலே காணப்படும் கோயில் பிரச்சனைகளில் தீர்வுகாண முடியாத ஒரு நிலைக்கு யார் காரணமாக இருக்கின்றார் என்றால் அதற்குள் ஒரு தமிழ் பாடசாலை ஆசிரியர் பண்டிதர் அல்லது சட்டத்தரணிகள் அந்தணர்கள் அரசியலவாதிகள் இவராகவே இருப்பார்கள். இது உண்மை. இதை மனச்சாட்சி உடைய எவரும் மறுக்கார்கள். இதனாலே நமது சைவநெறி மிக உயர்ந்த நெறியைக் கடைப்பிடிக்க முடியாது. நாளும நாளும் தவறுகளால் பெருகி கீழ்மைப்பட்டே போகின்றது. இதை யாரிடம் சொல்வது!

ஓர் ஆலயம் எதற்கு வேண்டும்? நாள் தோறும் நாம் செய்யும் செயலால் ஏற்படும் வினைகளை அங்குசென்று தரிசித்து நாம் தூய்மை அடைதற்காக! இந்த தூய்மை பெறும் நிலையை அக்கோயில் பகை பாராட்டப்படும் இடமாக களவு ஏற்படும் இடமாக வஞ்சனைபெருக்கும் இடமாக அந்தணர் பழுதான ஒழுக்கத்துடன் பூசை செய்யும் இடமாக இருந்தால் அதைச் சென்று தரிசித்து நாம் நன்மையுடைய தூயஉள்ளம் பெறலாமா? இதை எம் யாழ்ப்பாண மக்கள் விளங்கிக்கொள்ளட்டும். அல்லது ஏல்லாப் பண்டிதர்க்கும் தலையான பண்டிதமணி விளக்கி எமக்கு ஒரு கட்டுரை அனுப்பட்டும்.

என்றும் எமது சைவ ஆலயங்கள் கலிபெருக்கும் இடமாகக் கருதப்படவில்லை பதில் கலி நீக்கும் இடமாகவே நமது சமயாச்சாரிய பெருமக்கள் அவற்றைக் கருதினார்கள். கற்று ஆங்கு எரியோம்பி கலியை வாராமே செற்றார் வாழ்தில்லைச் சிற்றம்பலம் என்கிறார் எம்பிரான் சம்பந்தர் இதை நம்மக்கள் உணரவேண்டும்.

இந்த கலி பீடித்த நிலையில்தான் இணுவில் கந்தசாமி கோவில் இருக்கிறது. அக்கோயில் ஓர் கலிபீடித்த மக்களின் வெறியாட்டத்திற்கு ஏற்ற ஒரு இடமாக வந்துளது. அதை ஒரு கோயில் என்றும் அதை மதிப்பது எமது தூய நடத்தையாலும் ஒழுக்கத்தாலும் என யாருமே நினைப்பதில்லை. அங்கு பல பழுதுகளையும் செய்துவிட்டு நாம் சமர்த்தர் என்ற மனப்பாங்கில் பலரும் வாழ்கின்றனர்.

கோயில் நகை களவு ஐயாமார் இன்னொருவருக்குரிய சம்பளத்தைத் தான் எடுத்தல் கோயில் நகையை பாடசாலை விநோத உடைப் போட்டிக்கு இரவல் கொடுத்தல் கோயில் மண்டபத்திருந்து வம்பு வார்த்தை பேசல் முன்னால் கடுதாசி விளையாட்டு 25 கோர்ண் ஒலிபெருக்கித் திருவிழாக்கள் இவை பலவற்றையும் செய்து அக்கோயிலை கலிக்கு ஒரு விருந்தாக ஆக்குகின்றனர்.

அக்கோயில் மூலமூர்த்தியாக ஒரு சனீஸ்வரனைத் தாபித்து பின்னர் எள் எண்ணெய் எரித்தால் ஐயமாருக்கும் நல்ல வரும்படி கோயில் நிர்வாகத்திற்கும் நல்லவரும்படி கிடைக்கும். உண்மையில் அக்கோயில் என்றுதான் நல்நிலைப்படுமோ அறியோம்?

# கோவிலில் ஒலிபெருக்கிப் பாவனை பிழையேயாகும்

## முன்னாள் அரசாங்க அதிபர் கூற்று

இவ்வாறு முன்னாள் யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் திரு. ம. ஸ்ரீகாந்தா அவர்கள் நம்மிடம் தெரிவித்தனர். அவருடன் கோயிலில் இன்று நடக்கும் தவறான செயல் பற்றி நாம் பத்திரிகையில் சுட்டிக் காட்டவேண்டியதற்கு ஏற்பட்ட நிலை பற்றியும் கோயில் என்பது பூரண அமைதிக்குரிய இடமாகும் என்பது பற்றியும் விளக்கமாகத் தெரிவித்தேன்.

அப்பொழுது அவர் அங்கிருந்த தன் மனைவியிடம் இவர் சொல்வது சரி. ஏனெனில் நல்லூரில் நாம் போய் கும்பிடும்போது பஞ்சலாத்தி காட்டும் வேளை இன்னாருடைய பிள்ளையைக் காணவில்லை என்று ஒலிபெருக்கிச் சத்தம் நம்காதைத் துளைக்கும். ஒலிபெருக்கி விளம்பரம் கும்பிடுவாரை குழப்புகின்றது. இது தவறான செயல்என்பதைமக்களும் கோயில்நிர்வாகமும் உணரவேண்டும் எனக் கூறினார்.

இதனாலே கோயில் ஒலிபெருக்கிப் பாவனையால் எவ்வளவு பழுதுகளை நம்மவர் செய்கிறார் என்பதை இதனைப் பாவிப்போர் உணரவேண்டும்.

# கும்பிடும் என்காதைத் துளைத்தது

## பேராசிரியர் சச்சிதானந்தம்

மாவிட்டபுரத்தில் வாழும் பேராசிரியர் திரு சச்சிதானந்தம் நம்மிடம் ஒலிபெருக்கி பாவனை பற்றி கூறும்பொழுது ஐயோ என்ன செய்யலாம் நான் போய்க் கோயிலைக் கும்பிடும் வேளை அருச்சனைக்கு ரிக்கற்எடுங்கோ என்று விளம்பரம் ஒலிபெருக்கியில் காதைத் துளைக்கும்.

சண்முகநாதக்குருக்கள் இதை உணர்கிறார் இல்லை. நீங்கள் அவரை பெரிதாக உங்கள் பத்திரிகையில் எழுதினீர்கள் என்றதும்

நான்சொன்னேன் 'குழந்தைப் பிள்ளைக்கு விளையாட்டு சுண்டெலிக்கு சீவன் போகின்றது' என்ற பழமொழி போல சண்முகநாதனும் மக்களும் விதானைமாரும் படித்தவர்களும் குழந்தைக்கு விளையாடுகிறார்கள். என்செயலாம் என்றேன் பிழைஎன. உணர்ந்தும் பிழைசெய்வாரை நாம்என் செயலாம். மிகுசீக்கிரத்தில் அக்கோயில் புத்தவிகாரையாக ஆக்குவார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிறரது பிழைகளை மறந்து மன்னித்து விடு என்றார் யோகர் பெருமான். அருளின் வலியாற் பகைமையை அகற்றி அடிபணியச் செய்தல் நம் பெரியோரரது நீண்டகாலப் பெருமை என் கிறார் சேக்கிழார் சுவாமிகள்.

## இதை நன்கு சிந்திக்குமாறு தமிழர் விடுதலைக் கூட்டணியினரைக் கேட்டுக்கொள்கிறேன்

ஒரு நாள் யோகசுவாமி என்னை நோக்கி பிறர் செய்யும் பிழையை வேறொருவருக்கும் சொல்லாதே உன் மனதுக்குச் சொல்லிக்கொள்என்றார். நானேதும் சுவாமியைக்கேளாதிருப்ப சுவாமி இவ்வாறு சொல்லினார். எனக்கு அது திகைப்பாக இருந்தது. பிறர் எனக்குச் செய்த பிழைகளைப் பற்றி அக்காலத்தில், நான் பலரிடமும் சொல்லி அச்செயல் மூலம் பிழை செய்தார்க்கு அவமானம் தேட நினைந்திருந்தேன். அன்று தொடக்கம் பிறர் நமக்குச் செய்த தீங்குபற்றி பிறர் எவருக்கும் சொல்வதில்லை. காரணமின்றி இழிவுபடுத்த எத்தனிக்கவுமில்லை. சுவாமிகள் தொடர்ந்து மனம், தூய்மையாக இருந்தால் உன் பகையும் அடிபணியும் என்ற கருத்துக்களுடன் பலமுறை கூறியுள்ளார். நான் அப்பொழுது அதை நம்பவில்லை மனதிற் கொண்ட ஆத்திரங்கள் தீரவில்லை. சந்திரதீபப் பணி ஆரம்பித்த பின் பல பகைகள் நமக்கு வநதுற்றன, என்னில்லத்தில் வந்து என் கையை முறுக்கி உடற்றீங்கு செய்ய எத்தனித்தவர் பலர். என்னைப்பற்றி ஒலிபெருக்கியிற்கூட அவதூறுகப் பேசியவர்சிலர். அப்பொழுதெல்லாம் சுவாமியுடைய திருவாக்கே துணை புரிந்தது, அதனுடைய ஆற்றலை அனுபவத்திற் பெறக்கூடிய ஒரு நிலையை சந்திரதீபப் பணி உண்மையிற் தந்திருக்கின்றது. இன்று எமக்கு வன செயல் செய்ய நினைந்தோரும், பகையுடையவராயிருந்தோரும், நம்மிடம் அன்பும் அனுதாபமுமுள்ளவராக வநதுள்ளனர். சுவாமி அன்று மனதுடன சொல்லு என்று சொன்னபோது என் மனதுக்கு அவ்வளவுவலிமையுண்டோ என நினைத்தேன். பொய் நீங்கிய அறம் கலந்த இல்வாழ்வும், நீதி ஆகவாச் செயலும் இன்று என் மனதிற்கு நான் நினைத்தவாறே பகைமையை அகற்ற வல்ல வலிமையைத் தந்திருக்கின்றன.

பகைமையை அகற்றச் சுலபமான வழி சேக்கிழார் பெருமான் காட்டுகின்றார் அது வருமாறு:— முடிவிலாத துயரத்தைப் பிறர் நமக்குச் செய்கின்ற போதும் கூட நம் கடமையில் நாம் தவறாது, பகைமை புரிந்தார்க்கு தீமையைத்தானும் நினையாது நாம் வாழ்தல், நமது நீண்டகாலப் பெருமையில் எழுந்த சிறப்பாகும் என்பதைத் தெளிவாசக் கூறுகின்றார் சேக்கிழார் பெருமான்.

எந்த ஒரு ஆத்ம ஞானிக்கும் எட்டுணையான பகைமை நினைப்பும் வேண்டியதிலலை. இந்த ஒரு நிலையில தான் நமது தமிழ் பெரியோர்கள் நடந்து நம் நாட்டை அருள் ஆட்சியால் பாதுகாத்து பகை பாராட்ட முற்பட்டார் அல்லது வன்மை புரிந்தார் தாமாக அழிந்தொழியும் நிலையை வருவித்தனர்.

உண்மையான அன்பின் வழி வாழ்ந்து தனது ஆட்சியை செலுத்த முற்பட்ட சோழ அரசரை துயர் உறுத்தினரை தெய்வம் தண்டித்த வரலாறு பற்றி சுந்தரமூர்த்தி சுவாமிகள் தமது தேவாரத்து நயம்பட பாடியுள்ளார்.

அடுத்து பெரிய புராணத்து சேக்கிழார் பெருமான் மும்மையால் உலகாண்ட மூர்த்தி நாயனார் வரலாற்றில் மூர்த்தியாரை அன்பின் மூர்த்தியார் தாம் எனக் கூறி மூர்த்தி நாயனரை எமக்கு அறிமுகம் செய்கிறார்.

இந்த அன்பின் மூர்த்தியார் என்னும் மூர்த்தி நாயனார் நித்தலும் மதுரைச் சோமசுந்தரப் பெருமானுடைய திருமேனிக்கு சந்தனக் காப்பு அணிந்து வழிபடுபவர். இவர் இதைச் செய்துவரும் காலத்தில் அரசாங்கம் சமணரது வசப்பட்ட ஒருவன் கையில் அகப்பட்டது.

சமண அரசன் சைவ மக்களுடைய நிலையை சீர்குலைத்து அவமானப்படுத்திட எண்ணினான். அதனாலே சைவப்பணி புரிவார்கு எல்லையற்ற இடைஞ்சல்களை வருவித்தான். அப்படியான நிலையிலும் மூர்த்தியார் கலங்கவில்லை. அல்லது வேறு விரோதமான ஒரு செயலை ஏற்படுத்த நினைக்கவில்லை, தனது அன்பின் தகைமைக்கு பகை எனும் பங்கம் மாசுவிளைவியாதபடி தாம ஏதோ தம்மால இயன்ற வரை தம்பணியைச் சோர்வின்றிச் செய்தார். இதனைச் சேக்கிழார பெருமான் தமது ஒரு பாடலில்.

அந்தம் இலவாம் இறை செய்யவும்
அன்பனார் தாம்
முந்தம் முறைமைப் பணி முட்டலர்
செய்து வந்தார்
தந்தம் பெருமைக்கு அளவாகிய
சார்பில் நிற்கும்
எந்தம் பெருமக்களை யாவர்
தடுக்கவல்லார்.

இந்த நிலையில் இவர் ஒழுககத்தின் நயம்பறறி நன்கு தெரிவிக்கப் படுகிறது. ''தம்தம் பெருமைக்கு அளவாகிய சாா்பல் நிற்கும் எந்தம் பெருமக்கள்'' எனும் வாக்கை கூர்நது சநதியுங்கள். ஒரு தேசத்து மக்களை நன்நெறிப்படுத்து மேல் நிலைப்படுத்திலால் அன்றி சுதந்திரம் செல்வம் சுபீட்சம் வந்தடையாது. சுதந்திரத்திற்கு வித்து எப்பொழுதும் உயர்ந்த சிந்தையேயாகும் என்பது எல்லா தேசத்தையும் நல்வழிப்படுத்தி உயர வைத்த அந்தந்த தேசத்து பெருமக்களின் கொளகையாகின்றது.

உயர்ந்த சிந்தையில் எவரிடமும பகைகாண முடியாது. புறங்கூறல் வராது. பறா செய்த தீங்குகள் பற்றி வேறு எவரிடமும் சொல்ல வேண்டி வராது. தமக்கு ஏறபட்ட துயரததை மாற்றுகின்ற அந்த சக்தி அன்பு ஒனறிற்குத்தான. உயர்ந்த சிந்தையிலதான அன்பு பிறக்கும். ஏனைய நிலையில் அது வராது. இதனைத்தான பெரிய புராணதது சேககிழார் பெருமான்.

''அன்பினல் உலகை வெல்வார்'' என்று அன்றிருந்த எமது சைவ நாயன்மார் அனைவரையும் வர்ணிக்கின்றார். அன்பிற்குரிய ஆற்றல் அணுவிற்கும் இல்லை என்பதை கூட்டணியினர் நன்கு தெளியவேண்டும்.

கொழும்புத்துறை யோக சுவாமிகள் அடிக்கடி சொல்வது உன்னை அன்பு மயமாக்கினல் நீ உய்ந்தாய். இந்த உலகம் உன்கைவசம் எனக் கூறுகின்றார். பேச்சளவில் இது சுலபமாக இருக்கலாம். ஆனால் செயல் அளவில் தான் மிகுகடினமாவது.

அன்பெனும் மரத்தின் வேரான சாந்தம் பொறுமை தயவு அகிம்சை சத்தியம் இவையாகும். இந்த வேர்களில்தான் ஒருவருடைய உள்ளத்தில் அன்பு தழைத்திடும். அது இல்லாமல் வேறு எந்நிலையிலும் அன்பு ஊற்றெடுக்காது. யோக சுவாமி இதைப் பேச்சளவில் சொல்லவில்லை. தம்மையே அந்நிலையில் வைத்து பேசுகின்றார் தாம்பாடிய நற்சிந்தனைப் பதிகத்தில்,

அன்பே வடிவாய் அமைந்த துறவி
உன்போற் பிறர் இவ்வுலகினில்
உண்டோ

எனக் கூறிடுகின்றார். ஆம் சுவாமி தான் நினைத்தபடி வாழ்நது எல்லா மக்களினது நல்மதிப்பையும் பெற்றவர். இலங்கை அரசாங்கத்தில் பல பிரதம மந்திரிகளாய் இருந்தவர்கள் யோக சுவாமியிடம் தாமாகச் சென்று வழிபட்டு ஆசிபெற்று போனவரலாறுகள் உண்டு. சுவாமி யாழ்ப்பாணத்தில் இருக்கும் தனையும் பாரதூரமான விளைவுகள் இங்கு நடைபெறவில்லை, ஆனால் இன்று நடைபெறுகின்றன. இன்னமும் நடைபெறக் கூடிய நிலைகள் தோன்றிக் கொண்டிருக்கின்றன. இந்த ஒரு நிலையில நமக்கு நோக்கி இருக்கும் பேரிடர்களைக் கூர்ந்து சிந்திககவேண்டும்.

இந்த ஒரு நிலையை நாம சிந்தித்து செயலாற்ற வேண்டியது அவசியம். நமது வார்த்தைகள் சிலகால் பிடித்த மில்லாதது போன்று இருப்பினும் நாம் நமது தமிழ் இனத்தின் நல்வாழ்வு கருதி இப்பத்திரிகையை நடாத்திக்கொண்டிருப்பதால் இந்த வார்த்தைகளை பேசிடவேண்டி வந்துளது.

நமக்கு அயலவர் இழைத்த தீங்கு பற்றி வேறு நாட்டவரிடமோ அல்லது பிறரிடமோ சொன்னாற்போல அதனால் அத்தீங்கு தீர்ந்துவிடும் என்பது தவறான எண்ணம். நமக்கு துயர் புரிந்தார் தமது தவறை உணர்ந்து நம்மை மதிககக்கூடிய நிலையில் வராது, அடுத்து பிறர் செய்த துன்ப நிலைகளை வேறு பிறர் அறியும்படி அழைத்துக் காட்டினாலும் அதனாலும் தீங்கிழைத்தார் தம் தீங்கை அல்லது தவற்றை உணரப்போவதில்லை.

ஆதலால் நாம் நல் ஒழுக்கத்தாலும் நல் நடத்தையாலும ஏற்படுத்திக்கொள்ளும மனவலியால் (சாத்துவீக நிலையால்) நமக்கு இன்னல் விளைவித்தாரை உணரப்பண்ணலே நன்று. மூர்த்திநாயனார் தமது நறசிலமுடைய ஒழுக்கத்தால் தமக்கு தீங்கிழைத்த அரசாட்சியையே சீர்குலையச் செய்து தாமே அந்த நாட்டின் அரசனானர் என்பது புராணவரலாறு.

தமிழ் நாட்டின் பிரதம மந்திரியாக இருந்து அநபாயச் சோழனை அனைத்துலகங்கட்கும் அரசனாக்க வழி கண்ட சேக்கிழார் பெருமானுடைய வழியை பின்பற்றினால் தமிழ் மக்கட்கு நல்வாழ்வு சீக்கிரம் கிடைககும்.

# இப்படிக் கும்பாபிஷேகமே நலம்

கனநதங்கிய சந்திரதீபம் ஆசிரியர்.
அவர்கள்
கொக்குவில் மேற்கு

ஐயா,

கொழும்புத்துறை மேற்கு வதரீபீட விநாயகர் ஆலயத்து மேற்குத் திசையில் எழுந்தருளியிருப்பவரும், யோக சுவாமி அவர்களாலும் ஏனையோராலும் வழிபடும் மூர்த்தியாயுமுள்ள அருள்மிகுஸ்ரீபழனியாண்டவர் கோவில் புனர் உததாரணஞ் செய்யப்பட்டு சென்ற ஆனி 24 வ 8–7–81 புதன்கிழமை காலை உத்தர நட்சத்திரமும் சிததயோகமும் மிதுன லக்கினமும் கூடிய சுபமுகூர்த்தத்தில் காலை (6–00 — 6–30 வரை) சிவஸ்ரீ தி. பாலசுப்பிரமணியக் குருக்கள் தலைமையின் 5 குருமாரால் கும்பாபிஷேகம் மிக சிறப்பாகப் பத்தி சிரத்தையுடன் நடந்தேறியது.

இதில் உள்ள சிறப்புகள் யாதெனில்:

1. 100 வருஷங்களுக்கு முன் அவ்வூரில் பிரபலம் வாய்ந்த திருதில்லையம்பலம் குமாரசாமிச் செட்டியார் என்பவரால் பழனியிலிருந்து இப்பழனியாண்டவர் விக்கிரகம் இங்கு கொண்டு வந்து பிரதிட்டை செய்யப்பெற்றது.

2. அக்காலத்தில் அவரது நண்பராக இருந்த மகாமகோபாத்திய டாக்டர் உ. வே. சுவாமிநாத ஐயர் அவர்களால பாடப்பெற்ற தோத்திரம், ஊஞ்சல், கீர்த்தனங்கள் என்பனவற்றை உடையது.

3. 45 நாட்களுக்குத் தினமும் அபிஷேகமும் திருவிழாவும், கடைசிக்கு 1008 சங்காபிஷேகமும் செய்ய ஒழுங்காயிருத்தல்.

4. கும்பாஷேகஞ் செய்து வைத்த உபயகாரன் திரு. பி. கே. பொன்னம்பலம அவர்கள் குறைவில்லாது வேண்டிய பொருள் உபகரித்ததுடன் பத்தி சிரத்தையாக ஒவ்வொரு கிரிகைகளிலும் சமுகமளித்தது.

5. கிரிகை முதற்தொடங்க ஆரம்பமணியடித்தவுடன் காத்திராப் பிரகாரமாகச் 'சந்திரதீபம்' ஆசிரியர் முருகன் லீலைகளை விரித்துரைக்கும் கந்தபுராண நூல்களை எனக்கு கொண்டு வந்து தந்து ஆசிகூறியது.

6. ஒலிபெருக்கியோ, வில்லுப்பாட்டோ முதலான கேளிக்கைகளின்றி மிகுந்த பத்தி சிரத்தையுடன் கும்பாபிஷேகமும் ஏனைய அபிஷேகம் திருவிழாக்களும் நடந்தன. நடக்கின்றன.

இவ்வித மகிமை பெற்ற அருள் மிகு ஸ்ரீ பழனியாண்டவரை யாவரும் வந்து தரிசித்து இஷ்டசித்திகளைப் பெற்றுய்யுமாறு வேண்டுகிறேன்.

இங்ஙனம்
தி. ச. தியாகராஜ ஐயர்
யோக சுவாமியால் தழுவி
ஆசீர்வதிக்கப்பட்டவர்

கொழும்புத்துறை
25–7–81

தென் இந்திய

## பேச்சாளர் திருப்தி தெரிவிக்கவில்லை

தென் இந்தியாவிலிருந்து 75வது சைவ மகாநாட்டில் கலந்து கொள்ள வந்த கருவூரைச் சேர்ந்த மக்கள் திருக்கேதீச்சரத்தில் தம்மைச் சந்தித்த போது யாழ்ப்பாண சைவ நிலைபற்றி வேதனை தெரிவித்தார்கள் என திருப்பணிச் சபைத் தலைவர். மு. ஞானப்பிரகாசம் நம்மிடம் தெரிவித்தார்கள். இதை யாழ்ப்பாணத்தார் உணரட்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நால்வர் காட்டிய நெறியே சைவநெறியாவது. இரக்கமும் ஈகையும் நிறைந்த வாழ்வினுல்தான் உயர்வு அடையலாம்

## மற்றைய எந்த வழியும் பழுதே பெருக்கும்

சென்ற சந்திரதீபத்தில் இந்து என்ற பேரில் வரும் சாம்பார் நெறி என்ற தலைப்பின் கீழ் தரப்பட்ட கட்டுரையின் தொடர்பாக நாம் தொடர்ந்தும் சொல்வது; ஒரு சைவன் எக்கொள்கைகளைக் கடைப்பிடிக்க வேண்டும் என்பதும் தருமமும் இரக்கமும் இல்லாவிடத்து அருள்நெறி சாரலரிது என்பதையும் எம்பிரான் திருமூலர் வாக்குகளாற் கண்டோம். இரக்கமே மற்றை நற்பண்புகளை வளர்க்க உதவும் என்பதை நால்வர் ஆசாரியப் பெருமக்கள் பல இடங்களில் வலியுறுத்தி உள்ளார்கள். இரக்கமுடையவன் பிறருக்குத் துன்பஞ் செய்யான். அவ்வழியே அவன் எல்லாப் பாவங்களினின்றும் நீங்குகின்றான். இரக்கத்தின் இன்றியமையாமையைத் திருத்தொண்டர் புராணத்தில், அடியார் சிறப்புச் சொல்லும்போது சேக்கிழார் பெருமான்

"ஆரங்கண்டிகை ஆடையும் கந்தையே பாரம் ஈசன் பணியல தொன்றிலார் ஈரநெஞ்சினர்"

என்று கூறுகின்றார். "ஈரமிலா நெஞ்சத்தார் சிவனைக் காணார்" எனப் பகவான் பாரதியாரும் கூறினார். ஆகவே சமயக்கிரியைகள் இரக்கத்தை வளர்ப்பனவாக அமையவேண்டும், இதனாற்றான் இரக்கத்தை மாசுபடுத்தும், ஏற்றத் தாழ்வு கற்பிக்கும் ஸ்மிருதி பத்ததிகளைச் சந்திரதீபம் அனுசரிக்க வேண்டாமென்று உறுதியுடன் கூறுகின்றது. "அன்பால் உருகி அகங்குழைந்தார்க்கன்றி என் பொன் மணியினைக் காணவொண்ணாதே" என்றார் திருமூலர் பெருமான். அப்பர் பெருமானுக்குத் திருக்கைலாய தரிசனத்தைக் காட்டும்போது, நிற்பனவும், சரிப்பனவுமான அனைத்துப் பொருட்களிலும் சிவசாந்நித்தயத்தை இறைவன் காட்டியருளினான். நமது பரமாசாரியர்கள் நால்வரும் கருணையே வடிவமாக விளங்கினார்கள். திருச்செங்குன்றூரில் திருஞானசம்பந்தப் பெருமான் இருந்த சமயத்தில் மிகக்கொடிய விஷச்சுரமான தொற்றுநோய் பரவியது, சம்பந்தப்பெருமான் அவ்விடத்தைவிட்டு நீங்காமல், அவ்வூர் அடங்கலும் அக்கொடிய நோய் நீங்குமாறு திருநீலகண்டப் பதிகம் பாடியருளினார். பாச்சிலாச்சிரமத்திலே திருக்கோயிலின் முன்பாக முயலகன் என்னும் கொடிய நோயால் வருந்தும் பெண் குழந்தையின் துயரைச் சகிக்கமுடியாது சம்பந்தப் பெருமான், இக்குழந்தையை வாட மயல் செய்வதோ உமது மாண்பு என்று இறைவனையே கடிந்து கொள்கின்றார். இறைவன் அருளாற் குழந்தையும் நலம் பெற்றது.

திருப்புக்கொளியூர் அவிநாசியில் எம்பிரான் சுந்தரர் சென்றபோது அவ்வூர் அடியவர்கள், அங்கு ஒரு உபநயனம் நடக்கும் வீட்டிற்கு அழைத்தார்கள், அங்கு சென்ற அவருக்கு அயல்வீட்டில் இருந்து வந்த அழுகைக்குரல் மன வேதனையைக் கொடுத்தது காரணத்தை விசாரித்தபோது, உபநயனம் நடக்கும் சிறுவனின் ஒத்தவயதுடைய அவ்வீட்டாரின் குழந்தை நீராடும்போது முதலையாற் கவரப்பட்டதை அறிந்து மனம் நொந்து திருப்புக்கொளியூர் அவிநாசியிற் சென்று,

"வழிப்போவார் தம்மோடும் வந்
துடன் கூடிய மாணிநீ
ஒழிவதழகோ சொலாய்
அருளோங்கு சடையானே
பொழிலாரும் சோலைப்புக் கொளி
யூரிற் குளத்திடை
இழியாக் குளித்த மாணி யெனைக்
கிறி செய்ததே"

இதனையும் இறைவன் பொறுப்பானா, குழந்தையை பெற்றோர்கள் அடையச் செய்தான். இவ்வாறு அருளுடையார் செய்யும் வழிபாடுகளால் அவர் மாத்திரமல்லாமல் அனைத்துயிர்களும் நன்மை அடைகின்றன, என்று பெரியோர்கள் கூறியுள்ளார்கள். கச்சியப்பர் பெருமான் கந்தபுராணத்தில், வீரவாகு தேவர் முருகப்பெருமானை உள்ளன்புடன் வாழ்த்தி வணங்கியபொழுது அனைத்துயிர்களும் குதூகலித்தன என்று கூறுகின்றார்.

"மீதுகொள் பொடிப்புமூட மெய்ப்
புலன் சிந்தையொன்ற
வோதுவதவற வென்பு முருகிய
செருக நாட்டங்
கோதில் பேரருளின்மூழ்கிக்
குதூகலித் திடுதலோடும்
மூதுலகனைத்தும் ஆவி முழுவதும்
மகிழ்தவன்றே"

— கந்தபுராணம்

இவ்வாறு இரக்கத்துடன் கலந்த வழிபாடு, உண்மையன்பு செறிந்த வழிபாடு உலகம் முழுவதும் நன்மையைக் கொடுக்கும். இரக்கம் இல்லாத ஆடம்பரம் ஆணவம் செருக்கு இவற்றை வளர்க்கும் வழிபாடு வழிபாடல்ல என்பதே நால்வர் ஆசாரியர்களினதும் திருஉள்ளமாகும். இந்த இரக்க நிலையின் அவசியத்தை மற்றைய நாடுகளிற் தோன்றிய பெரியார்களும் கூறியுள்ளார்கள்.

எவனொருவனின் ஆக்கத்தைக் கண்டு மக்கள் சந்தோஷமடைகின்றார்களோ அவன் நம்மைச் சார்ந்தவனாகின்றான். எவனொருவனின் வாழ்வு மலாவதைக் கண்டு மக்கள் பீதியடைகின்றார்களோ அவன் நம்மைச் சார்ந்தவனல்ல என நபிகள் நாயகம் (ஸல்) கூறியருளினார்கள். இரக்கமுடையவனின் ஆக்கம் பலருக்கும் நலன் செய்கின்றது, இரக்கமில்லாதவனின் செல்வம் சுரண்டல் (பரிக்கிரகம்) பிறரை அடிமைப்படுத்தல் இவற்றிற்குச் செலவாகின்றது. பரிக்கிரகம் சகல துன்பத்திற்கும் காரணமாகின்றது என்று இறைவன் வீராகமத்திற் கூறுகின்றான். நீதி உறுதியாகக் கடைப்பிடிக்கப்பட வேண்டியதொன்று; அதற்குதவுவது இரக்கம்.

"இன்னவுரு இன்னனிற மென்றறிவ
தேலரிது நீதிபலவும்
தன்னவுருவாமென மிகுத்தவன்
நீதியொடு தான்மர்விடம்
முன்னை வினைபோய் வகையினால்
முழுதுணர்ந்து முயல்கின்றமுனிவர்
மன்ன இருபோது மருவித் தொழுது
சேரும் வயல் வைகாவிலே"

— சம்பந்தப்பெருமான்

வஞ்சமின்றி வணங்குமின் வைகலும்
வெஞ் சொலின்றி விலகுமின் வீடற
நைஞ்சு நைஞ்சு நின்றுள் குளிர்
வார்க்கெல்லாம்
அஞ்ச லென்றிடும் ஆனைக்கா
அண்ணலே.

— அப்பர் பெருமான்

நீதியாற் றொழுவார்கள் தலைவனை
வாதையான விடுக்கும் மணியினை
கோதி வண்டறையுந் திருக் கோளிலி
வேத நாயகன் பாதம் விரும்புமே.

— அப்பர் பெருமான்

அனுசயப்பட்டது இது என்னாதே
கனிமனத் தொடு கண்களும் நீர்மல்கி
புனிதனைப் பூவனூரனைப் போற்று
வார்
மனிதரிற் தலையான மனிதரே.

— அப்பர் பெருமான்

நாதனை நாதமித் தோசைய தானவனை
ஞான விளக் கொளியாமூ னுயிரைப்
பயிரை
மாதனை மேதகுதன் பத்தர்மனத்
திறையும்
பற்று விடாதவனைக் குற்றமில்
கொள்கையனை
தூதனை என்றனையாள் தோழனை
நாயகனை
தாழ்மகரக் குழையுந் தோடு
மணிந்த திருக்
காதனை நாயடியேன் எய்து வதென்று
கொலோ
கார்வயல் சூழ் கானப் பேருறைகா
ளையையே.

— சுந்தரர் பெருமான்

# ஐயர்மீது மனேசர் காறி உமிழ்ந்தார்

## அளவெட்டி பெருமாள் கடவையில் நடந்தது

### கும்பளாவளை மாட்டுச் சவாரி போல் நிர்வாகம்

அளவெட்டி பெருமாள் கடவை பிள்ளையார் கோவிலில் ஐயரும் எஜமானும் வாக்குவாதப்பட்டு ஐயர்மீது எஜமான் காறி உமிழ்ந்தாராம்.

நமது ஆலயங்களில் முகாமையாளர் என்ற கோட்பாட்டில் இருப்பவர் பலரும் சைவ தருமத்தை மனதில் கொள்ளாது செய்யத்தகாத பல பழிகளையும் கூச்சமின்றிச் செய்து வருகின்றனர்.

தமிழர்களாய எமது ஆலயங்களில் அந்தணரும் அறங்காவலரும் நடந்து கொள்ளும் முறையை நோக்கினால் இத்தகைய ஒரு நிலையில் நமக்கு கோயிலும் வேண்டுமா என்ற எணணமே தோன்றுகிறது.

கோயில் என்றால் அங்கு கடவுள் இருக்கிறார் என்ற நிலையில் எட்டுணையேனும் பகை பொல்லாங்குகள் நிகழக்கூடாது என்பதை அறிவு படைத்த அனைவரும் ஏற்க வேண்டும். அதை விடுத்து மிருகவெறி பிடித்த அறங்காவலரும் மக்களும் நடந்தால் அந்தக் கோயில் ஓர் புனிதமான இடமாகக் கருதப்படமாட்டாது. பதில் ஓர் சுடு காடாகவே கருதவேண்டும் சுடுகாட்டில் தான் நரியும் நாயும் பிணம் தின்ன சண்டையிடுவன.

கோயில் என்பது மனிதன் சித்தத்தூமை பெறுவதற்குரிய இடம். ஆனால் இன்று கோயில் பலவும் பகை பெருக்குமிடமாக மனிதன் சண்டை பிடிக்குமிடமாக மாறினால்; கோயில் மேல் நாம் செலவிடும் பணத்தை நீக்கி மக்களின் நலனிற்காக பலகைத் தொழில் சாலையை வைத்தியசாலைகளை கல்வி பயிலும் நிலையங்களை நாம் உருக்குவதில் ஏதும் தவறில்லை.

கோயில் எப்படியாக வேண்டும் என்பதை ஓர் கற்பனைக் கதைமூலம் திருவிளையாடல் புராணமூலம் தெரிவிக்கப்படுகிறது. அது தான் மதுரை நகரை ஆண்ட பாண்டிய அரசன் கோயில் கட்ட எண்ணி எங்கு அதைக் கட்டலாம் என எண்ணினான். இப்படி அவன் தக்க இடத்தை தேரும் வேளையில் ஒரு வேடன் அரசனிடம் சென்று அரசே இன்று நான் ஓர் வனச்சோலையில் அற்புதம் கண்டேன். என்ன வெனில் பசுவும் புலியும் ஒன்றுடன் ஒன்று விளையாடி நின்றது. மயிலும் பாம்பும் ஒன்றாயிருக்கக் கண்டேன். என்றதும் அரசன் அந்த வேடனை அழைத்து எங்குள்ளது அந்த இடமெனத் தேடிச் சென்று கண்டு அங்கேயேதான் எண்ணிய கோயிலைக் கட்டி முடித்தான். அதுவே மதுரைக்கோயில் என்பது வரலாறு.

இந்த உயர்ந்த நிலைகளை நம்சைவ மக்களும் அந்தணரும் உணராமல் மிருக வெறியில் ஒலிபெருக்கி அடிபிடி முதல் பல அநீதிகளுடன் கோயிலை நடத்தி பெருங்கேடு சூழ்கின்றனர். கும்பளாவளை பிள்ளையார் கோயில் மாட்டுச் சவாரிக்காறர் 25கோர்ண பூட்டித் திருவிழாச் செய்தால் நாங்கள் பெரியவர் எங்களைவிட உயர்ந்தார் இல்லை என எண்ணுகிறார். மிருகங்கள் கூட மனிதரை அமைதியாக இரவில் நித்திரை செய்யவிடும் ஆனால் திருவிழா என்றால் எங்கள் தமிழ் மக்கள் வெறிபிடித்த நாய்போன்றே கோயிலில் நடப்பார்கள். மாட்டுச் சவாரி போலவே திருவிழா இன்று நடைபெறுகிறது.

# குடையிற் சாமியை சமாதி வைத்து

## குளறித்தள்ளல் கும்பாபிஷேகமா?

குடையிற் சாமி என்பவர் மிக அமைதியானவர். அவர் சாக கோண்டாவில் மக்கள் சிலர் தம் எண்ணப்படி அவரது உடலை கோண்டாவில் பலாலி வீதியில் உள்ள கோவிலில் சமாதி வைத்தனர். இப்பொழுது பிள்ளையார் கோவிலை புனருத்தாரணம் செய்து கும்பாபிஷேகம் செய்தனர்.

ஒலிபெருக்கி பிடித்து குளறித் தள்ளி கும்பாபிஷேகத்தை ஊர் அறிய பெருமையாகச் செய்தனர்.

குடையிற் சாமி அடிக்கடி அருள் புலப்படும் பார் பார் என்பவர். இந்த ஒலிபெருக்கியில் எதைப் பார்க்கலாம். என்பதை கும்பாபிஷேக மலர் வெளியீட்டுக் குழு தெளிவு படுத்தட்டுமே! ஊருக்குத் தம் பெருமை காட்டவே திருப்பணி செய்தனர் என்பது தெளிவு. இச்செயல் குடையிற் சாமியையே அவமதிப்பதாகும். அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை ஆரிருள் உய்க்கும் என்பதை அறியீரோ? தங்கள் தங்கள் குடும்பத்துடன் அடக்கமாக வாழத்தெரியாதவரே இது செய்வார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மக்களின் உயர்வையும் சிறப்பையும் உணர்ந்து சேக்கிழார் பெரிய புராணமூலம் காட்டும் நல்ல அறங்கள்

## வலியற்ற முதியோரை வன்செயல் செய்தல் வெற்றியாகாது. 25 கோர்ண் பூட்டிய திருவிழா என்றும் தமிழ் இனத்தை நாசமாக்கும்

## ஆலயங்களில் மக்கட்கு அமுதூட்டலையே பெருவிழாவாகக் கொண்டால் என்றுமே தமிழ் இனம் அடிவாங்காது

நமது தமிழ் மக்களிடம் சில சிறுமைகள் தாமாக ஏற்பட்டு நமது தமிழினத்து இளைஞர்கள் மிகவும் இழிவான நிலையை தமக்குள் பெருக்கிக் கொள்வதைக் காண மிகுவேதனையாக இருக்கிறது.

கால்சட்டை சாரம் சேட்டுடன் சயிக்கிளில் வானில் அல்லது பஸ்ஸில் சென்றிடும்போது வயதின் மூத்தோரை சிறிதேனும் மதியாதபடி என்னணை அப்பு என்னணை அம்மான் கொஞ்சம் விலத்திப்போவன், என்னணை அப்பு ஆச்சி கவனிக்கிறதில்லையோ? என்பதும் முதியவர் ஏதும் கொண்டு போனால் தட்டி விழுத்துவதும் சயிக்கிலால் செல்லும் போது அப்பு விழுந்து போவர் கவனமாக ஓடடா என்று கிண்டல் செய்து போவதும்இன்றைய இளைஞரிலும் சர்வசாதாரணமாகக் காணப்படுவது.

பொதுவாகச் சொல்லப்போனால் நமது தமிழ் மக்கள் இன்று வயதில் மூத்தாரையும் நாகரீக உடையணியாது நாலுமுழ வேட்டி ஒரு சால்வை இவ்வளவும் உடையாரை இவர்கள் இவ்வுலகிற்கு வேண்டப்படாத ஒரு மனிதராக சமூகத்தில் மிகவும் குறைபாடுடையவராக கருதிக்கொள்கிறார்கள்,

இப்படியான மக்களை வலியால் குறைந்த வயோதிபரை நக்கல் செய்வதும் கண்டு சிரிப்பதும் மிகவும் சர்வசாதாரணமாகிவிட்டது. பெரும்பாலும் வலி அற்றவரை வலி செய்தல் ஒரு கௌரமாக ஓர் வெற்றியாக தமிழ் இளைஞர் பலர் கருதி வாழ்கின்றனர்.

இத்தகையோர் தமது நிலை பற்றிச் சிந்திப்பதில்லை. இத்தகையோரில் பலர் சிகரட் சொண்டின் நுனியில் வைத்துக்கொண்டு பேய்போல் சடையும் வைத்து தந்தையாயினும் வயதின் மூத்தால் அவரை வலிசெய்து ஏசி அடங்கப்பண்ணினால் தமக்கு ஒரு வெற்றியாகும் என எண்ணி வெறிநாய் போல் நிற்கின்றனர்,

எங்கள் யாழ்ப்பாணத் தமிழர் கால்சட்டை போட்டு விட்டால் அப்பால் தம்மை கம்மாண்டர் இன் சீவ் ஆகவே கருதிக்கொள்கிறார்கள். இந்தக் கால்சட்டைக்குத்தான் இந்தக் குறைபாடோ அல்லது அணிவாரின் பிறவிப்பிணியோ அறியோம் தமிழ் மக்கள் தாம் கால்சட்டை போட்டால் தாம் உயர்ந்து விட்டோம். சாரம் உடுத்தால் சண்டியன் ஆனோம் என்ற மனப்பாங்குடன் திரிகிறார்கள்.

இந்த ஒரு நினைப்பு உண்மையில் எம் தமிழினத்தின் நலனை உயர்வை தமிழரது நாகரீகத்தை முற்றிலும் நாசமாக்கி இந்த தமிழ் இனம் என்றும் அல்லற்பட்டு அடிவாங்கி உதை வாங்கும் சமூகமாக வந்திடும்.

இன்று இந்த உலகில் திரும்ப அடிவாங்கி கப்பலிலும் பிளேனிலும் றெயிலிலும் ஓடிவந்து ஆறுதலாய் யாழ்ப்பாணத்திருந்து வீரபுருஷர் நாம் என்று எமது வீரத்தனத்தை இங்குள்ள வலியற்றாரிடம் காட்டி பெருமைப்படும் சாதி தமிழ் இனமே; தன் இனத்தைதான் அழித்து இகழ்ந்து தேவையற்றவரை மிகுதியாகப் புகழ்ந்து பெருமைப்படும் இனம் தமிழ் இனமே! தன்செயலை தரும அடிப்படையில் சிந்தியாத இனம் தமிழ் இனமே!

நன்மை சொல்வாரை அவன் விசரன் என கூறி இகழ்ந்து 25 கோர்ண் பூட்டி திருவிழாச் செய்து 25000 சீனவெடி கொழுத்தி பாராளுமன்ற தேர்தல் வெற்றிகொண்டாடி இங்கே கும்மாளம் அடிப்பவர் தமிழ் இனமே! இப்படியான வெற்றி கொண்டாடும் இவர்கள் ஏன் அடி வாங்கினோம் எடே 25 கோர்ண் பூட்டி திருவிழாச் செய்து பறந்து போறாளே வாறாளே என்ற பாட்டும்பாடி ஊரில் உள்ள கன்னிப்பெண்கள் அத்தனையையும் கோயில் வரப்பண்ணி அங்கு கண்ணடிக்க வேண்டிய இடத்தில் கண்ணடித்து கடலையால் எறிய வேண்டிய இடத்தில் கடலையால் எறிந்து கோயில் வீதியில் சிகரட் துண்டெல்லாம் எறிந்து எங்கள் திருவிழாவிற்கு எவ்வளவு சனம் பார்த்தாயா என்று நோயாளரையும் நித்திரை செய்ய விடாது திருவிழாச் செய்து மகிழ்வது எமது தமிழ் இனம்; அடிவேண்டி வேண்டி ஓடி ஓடி வந்து திருவிழாச் செய்ய காசும் கொடுத்து மகிழும் தமிழ் இனம்; திருவிழாச் செய்த கோயிலை நோக்கி அல்லது அங்கு கடவுள் இருக்கு என்று ஒலிபெருக்கியில் மந்திரம் சொல்லி கற்பூரம் சுழற்றி கைதுடைக்கும் குருக்களை நோக்கி,

''ஐயா எங்கள் குருமணிகளே நீங்கள் பூசை செய்தீர் நாங்கள் திருவிழாச் செய்தோம்''

ஆனால் அடிமேல் அடி இடிமேல் இடி உடைமேல் உடை எரிமேல் எரி சூட்டின் மேல் சூடு துர்க்கை அம்மன் கோயில் முன்னால் சூடு நடக்குது இதேன் இப்படி என்று கேட்பார்களா? ஐயர் பாவம் வேண்டின காசில் நித்திரை வெறிமுறிய உருகாதவகை உருகி செருக வேண்டிய இடம் செருகி அலுப்பு நீங்க பருக வேண்டியன பருகிப் பயன் பெறுபவர் என சொல்வாரோ தெரியாது! அவங்கள் அடிச்சால் என்ன அடிச்சாலும் திருவிழாவை விடாதே என்றே சொல்வர் எங்கள் குருமணிகள் என நம்புகிறோம்.

உண்மையாக இன்றைய திருவிழாக்கள் சைவ சமயத்திற்கு ஒரு நோயாக; தமிழ் இனத்தை அடிமையாக நீதிஅற்ற மனிதராக வாழவழி காட்டும் ஓர் விபசாரத் தொழிலாக ஆகிவிட்டது என்பதை நம்மக்கள் நிச்சயம் உணரவேண்டும்.

எந்த விதமான ஆடம்பர விழாவும் முடிவில் துன்பமாகும் என்பதை இனியாதல் மக்கள் உணரவேண்டும். ஆடம்பரவிழாவை தெய்வங்கள் ஒரு போதும் ஆதரிக்காது, ஆடம்பர விழாவில் மகிழும் எந்த ஒரு சமூகமும் மேல் நிலைப்படாது என்பதை நன்றாக உணருங்கள்.

தமிழ் விழா நடத்திக்கண்டபலன் 11 பேரைச் சாக்காட்டினார். சம்பத்தரசிரியர் கல்லூரி மைதானத்தில் நடந்த கலியாட்ட விழாவால் எத்தனையோ தமிழ் மக்களின் உயிரைப் பலி எடுக்க வழிகண்டது.

தார்சட்டி விழா எத்தனை தமிழ் மக்களின் உயிரையும் உடைமைகளையும் பலி எடுக்க வழியானது.

முடிவில் 25க்கும் அதிகமான கோர்ண் கட்டி திருவிழாச் செய்த நாச்சிமார் கோவில் அரசியல் கூட்டம் எங்கு கொண்டுபோய் விட்டது.

உண்மையில் இன்றைய தமிழ் மக்களின் போக்கை அவதானித்தால் வெறி நாய் எறிந்த கல்லைச் சென்றோடிக் கடித்தல் போன்று ஏதோ சிறுமை கொண்ட மனப்பாங்கில் எதையும் சிந்தியாதுசெய்கின்றார்கள். இன்று ஆலயங்களில் நடக்கும் திருவிழா முறை வெறிநாய் கல்லைக் கடித்து முடிவில் தனக்கு கேடுவருவிக்க முயல்வதை ஒத்திருக்கின்றது.

25 கோர்ண் பூட்டி திருவிழாச் செய்து சத்தத்தால் நிலமே அதிர வைத்தால் என்ன பலனை யார் அடைவார். அல்லது பறந்து போறாளே பாடினால் கோயிலில் வந்த பெண்ணினம் என்ன நினைப்புக் கொள்ளும் இளைஞர் என்ன நினைப்பாகும்!

ஐம்பதிலும் ஆசைவரும் எனப் பாடும் பாடலால் அங்குள்ள முதியோர் என்ன நினைப்பார்? முன்னால் உள்ள கன்னிப்பெண்ணைக் கண்டு அவன் பாடுறது சரி இந்தப் பெட்டை அதற்குச் சம்மதிக்குமோ என்றல்லவோ நினைப்பார்.

ஐம்பதிலும் ஆசைவரும் என்றால் திருமுருககிருபானந்தவாரியார் கூட வயிற்றைத் தடவி ஒரு கிமிட்டுடன் ஆமா அப்படி எல்லாம் உண்டுதான் என வியாக்கியானம் செய்வார். கடவுள் சந்நிதி என்றாலும் வாரியார் வயிறு குலுங்கிச் சிரிக்க வைத்தலில் சமர்த்தர் தானே!

இத்தகைய திருவிழாக்களில் வாரியார் பிரசங்கம் மற்றும் தங்கம்மா முதல் அனைத்து பிரசாரச் செல்விகள் செல்வர்கள் யாவருடைய பிரசங்களுமே ஏதும் எந்த ஆலயத்திலும் ஒரு நன்மை விளைவியாத செய்கையே. இன்று இந்த பிரசங்கங்கள் எதினாலும் ஏதும் நன்மையில்லை என்பதை திருக்கோணமலை ஈச்சந்தீவு வித்தியாலய அதிபர் நமக்கு அனுப்பி வைத்த செய்யுள் மூலம் தெரிவிக்கின்றார். அப்பாடல் இதுவாகும்;

தொண்டுள்ளம் இல்லாதார் தொண்டாற்றச் செல்லுங்கால்
தூய்மைஏது?
பண்டொன்று செய்ததையே பறைதட்டி நூறுதரம் பகர்தல் ஏனோ?
கண்டேதும் பலாபலனைக் கடிகாரத்தோடேகிக் கழித்தால் நேரம்
உண்டாகும் புகழ் அதற்கே உலகினிலே ஒருசிலபேர் உலவுகின்றார்.

ஆகையால் திருவிழா என்பது பசித்து வந்து ஏற்கும் அவர்க்கு உணவு கொடுத்தல் என்பதுதான் உண்மை விழா. இதைவிடுத்து எந்த வகை பாட்டுக் கச்சேரி ஒலிபெருக்கி மேளஅடி இவை யாவும் தமிழ் இனத்தை அழிவுறுத்தும் குறங்கொளிச் செயலாகும் என்பதை எல்லாச் சைவமக்களும் உணரவேண்டும்;

இதைப் பெரிய புராணத்து பூம்பாவை வரலாற்றில் சேக்கிழார் ஒரு பாடல் மூலம் நன்கு தெளிவுறுத்துகின்றார். அப்பாடல் இதுவாகும்.

மண்ணி னிற்பிறந் தார்பெறும் பயன்மதி சூடும்
அண்ண லார்அடி யார்தமை அமுதுசெய் வித்தல்
கண்ணி னால்அவர் நல்விழாப் பொலிவுகண் டார்தல்
உண்மை யாமெனில் உலகர்முன் வருகென உரைப்பார்.

இதன் பொருள் இதுவாகும்.

மண்ணினில் பிறந்தார் பெறுகின்ற பெரும்பயன் மதி சூடிய அண்ணல் சிவன் உண்மை அடியார்களை அமுது செய்வித்தல்; தமது கண்ணினால் திருவேடப் பொலிவு கண்டு ஆநந்தமுற்று இன்னமும் காணோமா என ஆர்வம் கூர்தல் இவையே உண்மையாம் பொருள் எனக் கொண்டால் எலும்புக்குடமே நீ உருப்பெற்று உலகர் முன்னாக வந்திடுவாய்;

இதை வலிஉறுத்தி சம்பந்தர் தம் தேவாரத்து கோவிலில் வைத்து கணவனும் மனைவியுமாகச் சமைத்து உணவு கொடுப்பதுவே விழா என்கின்றார் அதற்குரிய பாடல் பின்வருமாறு.

மட்டிட்ட புன்னை யங் கானல் மடமயிலைக்
கட்டிட்டங் கொண்டான் கபாலீச்சரம் அமர்ந்தான்
ஒட்டிட்ட பண்பின் உருத்திர பல்கணத்தார்க்கு
அட்டிட்டல் காணாதே போதியோ பூம்பாவாய்.

ஒட்டிட்ட பண்பின் உருத்திரபல்கணம் என்பது கொடுக்கும் உணவை உண்ணும் எல்லா மக்களையும் கருதுவதாகும். எல்லா மனிதரிலும் சிவனுண்டு. இதனை உணர்ந்து கொண்டு பிரசங்கம் முதல் பேய்த்தனமான வீம்புச் செயலை இனியாதல் சைவ மக்களே! நீக்குங்கள்.

## இப் பத்திரிகை பற்றிய தகவல்

இப்பத்திரிகை கொக்குவில் மேற்கு ஆனைக்கோட்டை வீதியில் வசிக்கும் திரு. வை. நல்லையா அவர்களால் தமது சந்திரதீப தவநெறி வளாகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது; வெளியிட்ட திகதி 20-7-1981 ஆகும் தொடர்புகட்கு ஆசிரியர், சந்திரதீபம், கொக்குவில் என விண்ணப்பித்து பெற்றுக் கொள்ளலாம். வருட சந்தா ரூபா 40.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org